சவையாருமறைதமிழினென்றேத்த

ஔவையாரருளிய

# ஆத்திசூடிக்கு

இயற்றமிழாசிரியர்

## இராமாநுசகவிராயர்செய்த

காண்டிகையுரை.

மூன்றாம்பதித்தல்.

அமெரிக்கன்மிஷியோன் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

௲அ௱ச௰௬

இதன்விலை. பிரதி-௧. ௹ அணா-௮.

## கடவுள்வாழ்க.

மூவருமொருவராமுதற்கடவுளைப்பணிந்
தேவருவினைப்பகையினைத்தெறுவோமே.
மாசிகர்தெய்வமெம்மானுருவாஞ்
தேசிகர்மலர்த்தாள்சிரம்புனைவோமே.
அருமறைதமிழென்றமரரும்வியப்பத்
திருமறைகருக்கிச்சில்வகையெழுத்தி.
ஒருமுறைபெருகுஉமுட்கொள்சற்றடியிற்
றிட்பநுட்பஞ்சிறந்தினிதுவிளங்க
வுட்கொள்சூத்திரங்களாவொண்பொருளுங்கு
மெளிதினியம்பியவெம்பெருமாட்டியை
யௌவையென்றுமஃதாத்திசூடியென்று
மிவ்வயினுலகோரியம்பபெற்றெற்றே.

இம்மூன்றுசெய்யுளும் உரைகாரர்இந் நூலின் உரையினிது முடிதற்பொருட்டுக் கடவுளையும்ஆசிரியரையும்ஔவையாரையு ம்முறையே வாழ்த்தியதுணர்த்திநின்றன வெனக்காண்க.

# கடவுள்வாழ்த்து.

ஆத்திசூடியமர்ந்ததேவனை
யேத்தியேத்தித்தொழுவோநாமே.

பூமிசுந்தரமுறப்புரையறநிறுத்து-மேமமந்தரமெனவெனைநிலைநிறுத்துஞ்-சோமசுந்தரனடிதொழுதவனருளினென்றுலிபன்றவையியற்றுமிந்நூலுளித்தலைச்செந்துறைவெள்ளைச்செய்யுள், யாதுணர்த்திற்றோவெனின், இந்நூலினிதுமுடிதற்பொருட்டு, ஔவைதான் வழிபடுகடவுளைவாழ்த்தியதுணர்த்திற்று.

இதன்பொருள்-ஆத்திசூடி-திருவாத்திமாலையைத்தரித்து, அமர்ந்த-வீற்றிருந்த, தேவனை-கடவுளை, (ஈச்வரனை) ஏத்தியேத்தி-துதித்துத்துதித்து, தொழுவோநாம்-யாம்வணங்குவோம், என்றவாறு. இச்செய்யுளடியிரண்டாய்த் தம்முளளொத்து ஒழுகிய வோசையையும் விழுமியபொருளையுங்கொண்டு நிற்றலாற் செந்துறைவெள்ளைச்செய்யுளெனக்காண்க. ஒழுகியவோசையி னொத்தடியிரண்டாய் விழுமியபொருளதுவெண்செந்துறையே, என்றாராகலின். ஏகாரமசைநிலை.

இ ரா.

ஔவையாரருளிச்செய்த

# ஆத்திசூடி.

கொன்றைவேய்ந்தன்,

அதிவீரராமபாண்டியனுரைத்த,

வெற்றிவேற்கை.

இம்மூன்று நூல்களுமித்தலைக்கொடுந்தமிழ் நாட்டில் எழுத்துக்கள்சிதைந்து மாறுபட்டுப்பாடம்பிறழ்ந்துஞ் சிலசூத்திரங்களறுபட்டுப்போயுஞ்சிலசூத்திரங்கள்நூதனமாகச்சேர்க்கப்பட்டுஞ் சூத்திரங்கள் நிற்கவேண்டிய நிலைபிறழ்ந்து மிவ்வாறேயவற்றினுண்மைபெருமைமுதலிய வெல்லாங்கெட்டிருத்தலைக்குறித்து,

பம்மல், அண்ணாச்சாமிமுதலியார்

குமாரராகிய

வேங்கடாசலமுதலியார்

விசயகோபாலமுதலியாரிருவரும்

இவற்றைப்பிழைதிருத்தியச்சிற்பதிப்பிக்கவேண்டுமென்றுகேட்டுக்கொண்டதினாலே தென்றிசைச்செந்தமிழ்நாட்டுப்பிரதிகளைவருவித்துப்பரிசோதித்து,

இயற்றமிழாசிரியராகிய

## இராமாநுசகவிராயராலே

பிழைதிருத்திக்காண்டிகையுரைசெய்யப்பட்டு, அக்காண்டிகையுரையிலிருந்தெடுத்தெழுதியச்சிற்பதிப்பிக்கப்பட்ட ஆத்திசூடியின்மூலபாடம்.

அமெரிக்கன்மிஷியோன் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை. பிரதி-௧, ரூ அணா. ௧.

ஔவையாரருளிச்செய்த

# ஆத்திசூடி.

## அறஞ்செயவிரும்பு.

செய் - செய்யும்படியாக, அறம் - தருமத்தையே, விரும்பு - நீயாசைப்படு, எ-று.

(இப்படிச்சொன்னதினாலே) தவிரும்படியாகப்பாவத்தையேவெறு (என்பதுங்கிடைத்தது,) அதினாலே, செய்வதுந்தவிர்வதுமாகிய இரண்டையுஞ்சொல்லியது இதன்கருத்தெனக்கொள்க.

செயற்பாலதோருமறனேயொருவற்
குயற்பாலதோரும்பழி. என - இவ்வாறு திருவள்ளுவனாருங்கூறினாரெனக்காண்க. (க.)

## ஆறுவதுசினம்.

ஆறுவது — ஆறவேண்டுவது, சினம் - கோபத்தீ, எ-று.

ஆறுவது என்றதினாலே, சினத்தீயெனக்காண்க. ஆறாதுசற்றுள்ளேநின்றால் உன்னையும்வெளிப்பட்டாற்பிறரையுஞ்சுடுமென்பதுகருத்து.

சினமென்னுஞ்சேர்ந்தாரைக் கொல்லியினமென்னு
மேமப்புணையைச்சுடும். என - இவ்வாறுதிருவள்ளுவனாருங்கூறுவதுகாண்க. (உ.)

## இயல்வது கரவேல்.

இயல்வது-(இரப்பவர்க்கு உன்னாற்கொடுக்கக்) கூடுமானசத்தியை, கரவேல்-ஒளிக்காதே, எ-று. ஒளித்தால் அது தீராப்பழியாமென்பது கருத்து.

இரக்கவிரத்தக்கார்க்காணிற்கரப்பி
னவர்பழிதம்பழியன்று. எ-டு-க. (௩.)

## ஈவது விலக்கேல்.

ஈவது-(தருமத்தைக்குறித்து ஒருவர்) கொடுப்பதை, விலக்கேல்-(நீ பொறாமைப்பட்டுத்) தடுக்காதே, எ-று.

தடுத்தால் நீ கெடுவதுமன்றி நின்சுற்றமுங்கெடுமென்பது கருத்து.

கொடுப்பதழுக்கறுப்பான்சுற்றமுடுப்பதூஉ
முண்பதூஉமின்றிக்கெடும். எ-க. (௪.)

## உடையது விளம்பேல்.

உடையது-உடையதாக வுனக்குவந்த பெருமையை, விளம்பேல்-(நீதானே கருவித்துச்) சொல்லாதே, எ-று.

அப்படிச்சொல்வது சிறியோர்செய்கையென்பது கருத்து.

பெருமைபெருமிதமின்மைசிறுமை
பெருமிதமூர்ந்துவிடல். எ-க. (௫.)

ஊக்கமதுகைவிடேல்.

ஊக்கமது-(நீ நன்முயற்சிகளைச்செய்யும்போது) தைரியத்தை, கைவிடேல்= (வருந்துன்பத்தைக்குறித்துக்) கைசோரவிடாதை, எ-று.

தைரியத்தைவிடாதுமுயல்வாயாயின் நீவேண்டியபொருள்தானேவரப்பெறுவாயென்பதுகருத்து.

ஆக்கமதர்விறுய்ச்செல்லுமசைவிலா
வூக்கமுடையா னுழை. எ-க. (௫.)

எண்ணெழுத்திகழேல்.

எண்-கணக்கோடுகூடியகணிதநூலையும், எழுத்து-எழுத்தோடுகூடிய இலக்கணநூலையும், இகழேல்-நீபழித்துரையாதை, எ-று.

அவையிரண்டுமுயிர்கட்கு இரண்டுகண்களாமாதலாற்புகழ்ந்துகற்கவென்பது கருத்து.

எண்ணென்பவேனையெழுத்தென்பவிவ்விரண்டுங்
கண்ணென்பவாழுமுயிர்க்கு. எ-க (எ.)

ஏற்பதிகழ்ச்சி.

ஏற்பது-ஒருபொருளை நீயாசகஞ்செய்துபெறுவது, இகழ்ச்சி-(ஒருவர்நன்றென்றுசொல்லினும்) இகழ்ந்துசொல்லத்தகும்பாவமாம், எ-று.

(இப்படிச்சொன்னதினாலே) ஈவதுபுகழ்ச்சியென்பதுங்கிடைத்தது. கிடைக்கவே நன்மையுந் தீமையுமாகிய இரண்டையுஞ் சொல்லியது இதன் கருத்தெனக்கொள்க.

நல்லாறெனினுங்கொளறீதுமேலுலக
மில்லெனினுமீதலேநன்று. எ-க. (௮.)

## ஐயமிட்டுண்.

ஐயமிட்டு-(பகுத்துண்பதற்கு இசையாதாயின்) இரப்போர்க்குப்பிச்சையிட்டு, உண்-(பின்புநின்சுற்றத்தோடுகூடியிருந்து) போசனஞ்செய், எ-று.

இரந்துண்பதினுமிழிவாதலால் தனித்துண்ணலாகாதென்பதுகருத்து.

இரத்தலினின்னாதுமன்றநிரப்பிய
தாமேதமியருணல். எ-க.

இக்குறளினுள்நிரப்பிய என்பதற்குப் பரிமேலழகர்வேறுபொருள்கூறினார், தங்கள்வயிற்றைநிரப்பும்பொருட்டுத்தாமே தமியருணல்—எனப்பொருள்கூறுவதேசிறந்துகாட்டியதுபோலும். (௯.)

## ஒப்புறவொழுகு.

ஒப்புற-(நீபலநூல்களையுங் கற்றுணர்ந்தவனானகாலத்தும் உலகத்தோடு) ஒத்திருக்க, ஒழுகு-ஒழுக்கமுடையவனாகநட.எ-று.

உலகத்தோடென்பது சொல்லெச்சமாய்க்குறைந்துநின்றது.

ஒழுக்கந்தவறிநடந்தாலறிவிலாதவனாவாயென்பதுகருத்து.

உலகத்தோடொட்டவொழுகல்பலகற்றுங்
கல்லாரறிவிலாதார். எ-க. (ப.)

## ஓதுவதொழியேல்.

ஓதுவது-வேதமோதலையும், ஒழியேல்-நீவிடாதை, எ-று. இது அந்தணரைநோக்கிற்று.

உம்மைகுறைந்துநின்றது அறிஞரிலேசிறந்தவொழுக்கத்தையும்விடாதையென்றவாறாயிற்று. ஆகவே அந்தணர்பிறப்பு இவ்விரண்டும்நீங்கிற்கெடுமென்பதாயிற்று. இதன்கருத்துவிளங்கிற்று.

மறப்பினுமோத்துக்கொளலாகும்பார்ப்பான்
பிறப்பொழுக்கங்குன்றக்கெடும். எ-க.

இக்குறளினுள் மறப்பினுமென்றது மறந்தாற்பிறப்புக்கெடுமென்பது தோன்றநின்றதனுலிச்சூத்திரக்கருத்தொத்திருத்தல்காண்க.

## ஔவியம்பேசேல்.

ஔவியம்-(பிறர்செல்வத்தைக்கண்டு) பொறாமைவார்த்தைகளை, பேசேல்-நீபேசாதை, எ-று.

பேசின் அறமும்புகழும்நின்னைவிட்டு நீங்குமென்பதுகருத்து.

அறனாக்கம் வேண்டாதானென்பான்பிறனாக்கம்
பேணாதழுக்கறுப்பான். எ-க. (௰௨.)

அக்கஞ்சுருக்கேல்.

அக்கம்-நின்சுற்றத்தை, சுருக்கேல்-நின்னிற்சுருங்கச்செய்யாதை, எ-று.

(நீபெற்றசெல்வத்திற்குப்பயன் அதுவாதலால்) நின்சுற்றம்நின்னைச்சூழ்ந்து நின்னினுமுயர்ந்திருக்கச்செய்யென்பது கருத்து.

சுற்றத்தாற்சுற்றப்படவொழுகல்செல்வந்தான்
பெற்றத்தாற்பெற்றபயன். எ-க.

வரகு-வரஃகு, இலகு-இலஃகு, என்றாற்போல இதனுள், அகம்என்பது-அஃகம், எனவொற்றில் வழியொற்றாய்ச்செய்யுளிடத்துநின்றுபின்புவழக்கிடத்துஅக்கமெனவிகாரப்பட்டு இடத்தாகுபெயராய்ச்சுற்றத்தைக்குறித்துநின்றது. இவ்வாறுசுற்றத்தைக்குறித்துவழங்கிவருவதை அக்கம்பக்கம்யாருமில்லையென்னுஞ் செந்தமிழ்நாட்டுவழக்குநோக்கிக்காண்க. அக்கம்— உள்ளிடம், உள்ளிடத்தார், பக்கம்- அயலிடம்-அயலிடத்தார், இனியிதற்குத்தானியவிலையைச்சுருக்காதை எனப்பொருள்கூறு

வாருமுளரெனின் அதுபொருளன்றென்
பதற்குஅக்கமுங்காசுஞ்சிக்கெனத்தேடு--
என்றபாடமேபிரமாணமென்க இன்னும்
இதனைகலமெல்லா மினிக்கூறு மிலக்கணவு
ரையுட்காண்க. (௰௩.)

கண்டொன்றுசொல்லேல்.

கண்டொன்று—(ஒருவனைக்காணுதொ
ன்றுசொல்லி) கண்டொன்றை,சொல்லே
ல்-நீசொல்லாதை, எ-று.

காணுதொன்றுசொல்லுதல்-இகழ்ந்து
சொல்லுதல், கண்டொன்றுசொல்லுதல்-
புகழ்ந்துசொல்லுதல், இவ்வாறுசொல்லு
தல் தருமத்தைக்கெடுத்துப் பாவத்தை
யேசெய்வதைப்பாரிக்கிலுந்தீதென்பதா
ம். இதன்கருத்துவிளங்கிற்று.

அறனழீஇயல்லவைசெய்தலிற்றீதே
புறனழீஇப்பொய்த்துநகை. எ-க. (௰௪.)

ஙப்போர்விளை.

ங-ஙகரத்தைப்போல்,போர்விளை-(நீயி
டைநின்றே) யுத்தஞ்செய், எ-று. இதுதா
னைத்தலைவனைநோக்கிற்று.

விரியுரை. ஙகரமானது மொழிமுதலி
லும் மொழியீற்றிலும்வாராமல் மொழியி

டைநின்றேதனக்கு முன்பின்னிற்குமெழு
த்தாக்களோடிணங்கி யம்மொழிகளோடு நட
த்தலதுபோலத், தானைத்தலைவனாகிய நீயு
ங்கொடிப்படையினுங்கூழைப்படையினு
நில்லாமல் இடைநின்றேயவ்விரண்டையுந்
தழுவிக்கொண்டு யுத்தஞ்செய்யென்றவா
றாயிற்று. சேனைத்தலைவனிப்படி நின்று
போர்புரியாமல்விலகிநிற்பானாயின் அச்
சேனைபகைவர் சேனையைப்போர்புரிந்து
வெல்லாதென்பதாகருத்து.

நிலைமக்கள்சாலவுடைத்தெனினுந்தானை
தலைமக்களில்வழியில். எ-க. (௰௬)

## சந்திநீராடு.

சந்திநீர்-(மனநலத்தின் பொருட்டுக்காம
வெகுளிமயக்கங்களைமாற்றிச்சத்திய மெ
ன்கின்ற பரிசுத்தநீரிலேஸ்நானஞ்செய்து
பின்புதேசநலத்தின் பொருட்டு) சந்திக்கி
ன்றநீரிலே, ஆடு-ஸ்நானஞ்செய், எ-று.

பின்பு, என்பது-சொல்லெச்சமாய்மு
தலிலேகுறைந்துநின்றது. ஆதலால்-பின்
புசந்திநீராடு எனக்கூட்டிக்கொள்க. இவ்வா
றுகூட்டவேமுன்புமனமாசுபோக்கிச்சத்
தியமென்கின்றநீரிலே ஸ்நானஞ்செய்து
என்பதுதானேவந்தியைதல்காண்க. சந்தி

த்தல்-பிறத்தல், சநிநீர்-ஊற்றுநீர் ஆற்று நீரென்றவாறாயிற்று: மநமாசுபடிந்திருப்பின் இந்நீர்படிதலுங்கூடாவொழுக்கமென்றிகழப்படுமென்பதுகருத்து.

மனத்தூய்மாசாகமாண்டார் நீராடி
மறைந்தொழுகுமாந்தர்பலர். எ-று. (௰௬.)

ஞயம்படவுரை.

ஞயம்பட-(நல்லசொற்களைச்சொல்லும்போதும்)இன்பமுண்டாகவே, உரை-நீசொல்லு, எ-று.

இப்படிச்சொன்னாற்பாவந்தேயத்தருமம்வளருமென்பதுகருத்து.

அல்லவைதேயவறம்பெருகு நல்லவை
நாடியினியசொலின். எ-று.

நயமென்பது,ஞயமெனமொழிமுதற்போலியாய்நின்றது.நயம்-இன்பம். (௰௭.)

இடம்படவீடெடேல்.

இடம்பட-(நிலையாமையையுடையசெல்வத்தைநீபெற்றால் அப்போதேநிலைத்திருக்குந்தருமங்களைவிரைந்துசெய்யாமல்) வெற்றிடம்பட, வீடெடேல்-வீட்டைக்கட்டாதே, எ-று.

வெற்றிடம்படவீடெடுத்தலாவது-குடும்பத்தளவும்பொருளளவுமேமேல்செய்

வோரளவும் ஆறுகைக்கமைந்தவீடாக இ
ருக்கச்செய்யாமல் ஆறுகைக்கமையாத
இடமாகவேயெடுக்க வீட்டைக்கட்டுவதாம்.
செல்வமுநிலையாதுதேகமுநிலையாமையை
யுடையது ஆதலாற்செல்வந்தோன்றிய
பொழுதே விரைந்து தருமங்களையேசெ
ய்யவேண்டுமென்பதுகருத்து.

அற்காவியல்பிற்றுச்செல்வமதுபெற்ற
லற்குபவாங்கேசெயல். எ-க. (௰அ.)

## இணக்கமறிந்திணங்கு.

இணக்கம்-(நீசிநேகிக்கப்படுஞ்சிநேகி
தன் நின்னோடுசிநேகித்தற்கேதுவாகிய)
நற்குணநற்செய்கைகளை, அறிந்து-(பல
காலாராய்ந்து) தேர்ந்து, இணங்கு-(அவ
னோடு) சிநேகஞ்செய், எ-று.

ஆராயாது சிநேகஞ்செய்வதுமுடிவி
லேதீங்குதருமென்பதுகருத்து.

ஆய்ந்தாய்ந்துகொள்ளாதான்கேண்மைகடைமுறை
தான்சாந்துயரந்தரும். எ-க. (௰௯.)

## தந்தைதாய்பேண்.

தந்தைதாய்-(நீநற்குணமுடையவனாகி)
நின் தகப்பனையுந்தாயையும், பேண்-
(இம்மைமறுமையிரண்டிடத்தும்) போ
ற்று, எ-று.

வி. இம்மையிற்போற்றுதலாவது-அவரைத்தெய்வமாகப்பாவித்துப்பூசைசெய்தொழுகுவது, மறுமையிற்போற்றுதலாவது-அவரைநோக்கிச்செய்யுந் தானதருமங்களால் அவர்தீவினைதேயச்செய்தொழுகுவது, இப்படிப்போற்றுவாயானால் நீயும் இன்புற்றுவாழ்வதன்றி யவரையுஞ் சநநந்தோறுந்தீவினைகள் அணுகா என்பதாம். இதன்கருத்துவிளங்கிற்று.

எழுபிறப்புந்தீயவைதீண்டாபழிபிறங்காப்
பண்புடைமக்கட்பெறின். என-இக்கருத்தேபற்றித்திருவள்ளுவனாருங்கூறியதுகாண்க. (௨௰.)

## நன்றிமறவேல்.

நன்றி-(ஒருவருனக்குச்செய்த) நன்மையை,மறவேல்-(நீயென்றைக்கும்)மறவாதை, எ-று.

என்றதினாலே அவருனக்குச்செய்ததீமையையப்போதேமறந்துவிடு. என்பதுங்கிடைத்தது, கிடைக்கவே- நன்மைசெய்தவனே தீமைசெய்வானானால் அந்தநன்மையைநினைந்து தீமையைநினையாதிருப்பதேநன்றென்பதுகருத்தாயிற்று.

நன்றிமறப்பதுநன்றன்றுநன்றல்ல
தன்றேமறப்பதுநன்று. எ-க. (௨௧.)

## பருவத்தேபயிர்செய்.

பருவத்தே-காலந்தப்பாமலே,(பதனோடுபொருந்த) பயிர்செய்—பயிரிடுதலையுஞ்செய், எ-று.

உம்மைகுறைந்துநின்றது, அதினாலே மற்ற நன்முயற்சிகளையுங்காலந்தப்பாமலேசெய்யென்பதாயிற்று. ஆகவே பயிர்செய் முயற்சிமுதலியனகாலத்தோடு பொருந்தி நன்றாகவாய்த்து மிக்கபயனைத்தருவதினாலே செல்வம்வளர்தோங்குமென்பதுகருத்தாயிற்று.

பருவத்தோடொட்டவொழுகறிருவினைத்
தீராமையார்க்குங்கயிறு. எ-க. (உஉ.)

## மன்றுபறித்துண்ணேல்.

மன்று—(நீசெங்கோலோடுகூடநடுச்சொல்வேனென்றிருந்து) பொதுத்தலத்திலே, பறித்து-(வழக்குத்தீர்ப்புக்குவந்தகுடிகளுடையபொருளை யாசகஞ்செய்பவன்போற்காட்டியடித்துப்பறிப்பவன்போற்பலவந்தமாகப்) பிடுங்கி, உண்ணேல்-சீவனஞ்செய்யாதை, எ-று. அரசன்யாசகஞ்செய்தற்கு உதாரணம்.

வேலொடுநின்றானிடுவென்றதுபோலுங்
கோலொடுநின்றானிரவு.

பொருத்தலம்-நியாயஸ்தலம், கூற்றம்-கூற்றுஎன்றாற்போல, மன்றம்-மன்று என நின்றது. உ-ம்-மன்றுளாடீஎனக்காண்க. மன்றமேவெளியிலுமம்வாசமம்பலமுமாகும். என்பதுநிகண்டு. இதுகுடிகளஞ்சத்தக்கக்கொடுந்தொழிலாதலால் விரைந்துகெடுவாயென்பதுகருத்து.

வெருவந்தசெய்தொழுகுமவெங்கோலனாயி
னொருவந்தமொல்லைக்கெடும். எ-க.

இனியிதைமண்பறித்துண்ணேலெனத் திருப்பி-பிறர்நிலத்தைப்பறித்துண்ணாதையெனக்கூறுவாருமுளர். அது அரசருக்குத்தருமமாதலாலது பொருந்தாதென்பதற்கு அதுவேபிரமாணம். இதுஅரசனைநோக்கிற்று. (உ௫.)

## இயங்கித்திரியேல்.

இயங்கி-(மெய்-வாய்-கண்-மூக்கு-செவி-என்னுமைம்பொறிகளும்-பரிசம்-இரதம்-ஒளி-கந்தம்-ஓசை-என்னும்ஐம்புலன்களிலே) சென்று, திரியேல்-நீகெடாதை, எ-று.

பின்புதிரியேல் என்றதுமுதல்வினையாதலால் முன்பு இயங்கி என்றதுசினைவினையெனப்படும் படவே இயக்கமென்பது

ஐம்பொறியியக்கமெனக்காண்க. கண்பார்த்திராதை என்றாற்போல இயங்கியென்னுஞ்சினைவினைதிரியேல் என்னுமுதல்வினையொடுமுடிந்தது. சினை, அவயவம் ஆமையைந்து உறுப்புகளையும் இடர்வாராமல் அடக்குவதுபோல நீயுமைம்பொறிகளைப்பாவம்வாராமல் அடக்குவாயானால் அது எழுவகைத்தோற்றத்திலும் உனக்கு இன்பந்தருமென்பதுகருத்து.

ஒருமையுளாமைபோலைந்தடக்கலாற்றி
னெழுமையுமேமாப்புடைத்து. எ-க.

எழுவகைத்தோற்றம்-தேவர்-மக்கள்-விலங்கு-பறவை-நீர்வாழ்சாதி-ஊர்வன-தாபரம், எனக்காண்க. (உச.)

அரவமாடேல்.

(நீகாக்கவேண்டிய எல்லாவற்றையுங்காக்கமாட்டாயாயினும் நின்னாவை வீணாக) ஒலியெழச்செய்யாதை, எ-று.

நாவைவீணாகஒலியெழச்செய்தலாவது-வீணாகப்பேசுதல், அவ்வாறுபேசாமல் அந்தநாவையாயினுங்காக்கவேண்டுங்காவாவிடிற்சொற்குற்றத்திலகப்பட்டுத்துன்பப்படுவாரென்பதுகருத்து.

யாகாவாராயினு நாகாக்ககாவாக்காற்
சோகாப்பர்சொல்லிழுக்குப்பட்டு. எ-க.

இனி அரவடாட்டேல் எனப்பாடமோதிப்பாம்பையாட்டாதை எனப்பொருள் கூறுவாருமுளர். அது பாம்பாட்டிக்குத் தொழிலாதலாலதுவேயதுபொருந்தாதென்பதற்குப்பிரமாணம். (௨௫.)

## இலவம்பஞ்சிற்றுயில்.

இலவம்பஞ்சில்-பின்பு இலவம்பஞ்சிட்டுச்செய்தமெத்தையிலும், துயில்- நித்திரைசெய், எ-று.

இதனுள்பின்பு என்பதும் எச்சவும்மையுங்குறைந்துநின்றன, அவற்றால்-முன்புஉயிர்க்கு அழகுசெய்யுங் கல்விகேள்விகளைக்கற்றுக்கேட்டு ஒழிவுளதாயின் என்பதும் பின்புகாலந்தப்பாமலுமுண் - என்பதும் பெறப்பட்டன, படவே, முன்புஉயிர்க்கழகுசெய்யுங்கல்விகேள்விகளைக்கற்றுக் கேட்டுக்காலவொழிவுளதாயிற் பின்பு உடற்கழகுசெய்யக்காலந்தப்பாமலுமுண் இலவம்பஞ்சிட்டுச்செய்தமெத்தையிலுந்துயில் எனக்கூட்டிப்பொருளுரைத்துக்காலவொழிவிலதாயிற்காலந்தப்பாமலுண்பதையுந்துயில்வதையும் நீக்கவேண்டுமெ

ன்பதுகருத்தெனக்கொள்க. உ-ம்- வித்யாதுராணாம் நசுகம்நநித்ரா-எனவும்,

செவிக்குணவில்லாதபோழ்துசிறிது
வயிற்றுக்குமீயப்படும்

எனக்கூறியதிருவள்ளுவனார்க்கும்சிறிதுநித்திரையுஞ்செய்யப்படுமென்பதுங்கருத்தெனவுங்காண்க. (௨௬.)

## வஞ்சகம்பேசேல்.

வஞ்சகம்-வஞ்சகத்தையுள்ளேவைத்து, பேசேல்-(அதைச்சொல்லுமேல்மறைத்துப்பிறர்மயங்கப்) பேசாதை, எ-று.

நின்றொடுகலந்துடம்பாக இருக்கின்ற ஐம்பூதங்களும் அதுகண்டுதம்முள்ளேயிகழ்ந்துநகைசெய்யுமாதலால் அதுதீராக்குற்றமென்பதுகருத்து.

வஞ்சமனத்தான்படிற்றொழுக்கம்பூதங்க
ளைந்துமகத்தேநகும். எ-க. (௨௭.)

## அழகலாதனசெயேல்.

அழகலாதன-(துன்பப்படவந்தகாலத்தும்) பழியொடுபட்டசெயல்களை, செயேல்-நீசெய்யாதை, எ-று. செய்யாதையென்றதனாற்காலமும் இறந்ததுதழுவிய எச்சவும்மையும்வருவிக்கப்பட்டன.

இவ்வாறுசெய்யாதிருந்தாற்குற்றமற்றவறிவுடையவனாவாயென்பதுகருத்து. உ-ம்.

இடுக்கட்படினுமிளிவந்தசெய்யார்
நடுக்கற்றகாட்சியவர். எனக்காண்க.

அழகுடையன்-புகழொடுபட்டசெய ல்களாதலால், அழகலாதன-பழியொடுப ட்டசெயல்களெனக்கொள்க. (இளிவரல்-இகழ்ச்சியாதலால்)--இளிவந்த--இகழ்ச்சி யானசெயல்களெனக்கொண்டு.அழகலாத னவெனப் பொருள்படுதல்கண்டு இக்குற ளினுள்-உதாரணங்கண்க. (உஅ.)

இளமையிற்கல்.

(எந்தநாடுமெந்தவூரு முன்சொந்தநா டுஞ்சொந்தவூரும்போலவே நின்னைப்பெ ருமைப்படுத்துமாதலால் அத்தன்மைத் தாகியகல்வியை) இளமையில்-இளமைப்ப ருவந்தந்திலேதானே தொடங்கி, கல்-நீசா மளவும்பயிற்சிசெய், எ-று.

கல்வியையென்றசெயப்படுபொருள் குறைந்துநின்றதாதலாலவ்வாறுவிரித்து ரைக்கப்பட்டது. சாமளவுங்கற்கவேண்டு மாதலாலிளமையிற்றொடங்கியென்பது பெற்றாம். வாழ்நாண்முழுமையுங்கற்றே கழிக்கவேண்டுமென்பதுகருத்து. உ-ம்.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன் சாந்துணையுங்கல்லாதவாறு. எ-ம். கலவாக்கழிப்பர் தலையாயார்-எனவுங்காண்க. (உகூ.)

### அறனைமறவேல்.

அறனை-தருமத்தை, மறவேல்-நீசெய்யமறவாதை, எ-று.

செய்யாதுமறத்தலின் மேற்பட்டகேடு இல்லையென்பதாம், ஆகவேயதனைச்செய்தலின்மேற்பட்ட ஆக்கமு மில்லையென்பதுங்கருத்தாயிற்று.

அறத்தினூஉங்காக்கமுமில்லையதனை
மறத்தலினூஉங்கில்லைகேடு. எனத்திருவள்ளுவனாருங் கூறுதல்காண்க. (௩௰.)

### அனந்தலாடேல்.

அல்-அஞ்ஞானமானது, நந்தல்-வளர்தலை, (வளர்தற்குக்காரணமாகியநூலை) ஆடேல்-நீபேசாதை, (மெய்நூலென்றுணர்ந்துபேசாதை,) எ-று.

அல்-என்பதுபண்பாகுபெயர், நந்தல்-என்பதுகாரியஆகுபெயர், ஆடல்-பேசல், கூத்தொடுவார்த்தை பெண்ணொண்கூடலிம் முப்போராடல், என்பதுநிகண்டு. பேசுவாயாயின் அதனாலேதுன்புறுதற்கேதுவாகியபிறப்பு உண்டாமென்பதுகருத்து.

பொருளல்லவற்றைப்பொருளென்றுணரு
மருளானாமாணாப்பிறப்பு. எ-இ-க.

இனியிதற்குத்தூங்கிவிழாதையெனப் பொருளுரைப்பினும் அமையும், (௩௧.)

## கடிவதுமற.

கடிவது-(ஒருவன்செய்தகுற்றத்தைப் பொறுது) சினந்தொறுத்தலை, (தண்டிப்பதை) மற-நீயெப்போழ்துமறந்துவிடு, எ-று. அப்படிமறப்பதினலேயுனக்கு உலகமழியுமளவும்புகழுண்டாமென்பதுகருத்தாயிற்று.

ஒறுத்தார்க்கொருநாளையின்பம்பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும்புகழ். எ-இ-க. ஒறுத்தல், தண்டித்தல். (௫௨.)

## காப்பதுவிரதம்

காப்பது-(உனக்குவந்தநோயின்பொருட்டாயினுமோருயிர்க்குந்தீங்குசெய்யாமல் அந்தநோயை நீயேபொறுத்தநுபவித்து) எல்லாவுயிர்களையுங்காப்பாற்றுவதே, விரதம்-தவம்,(தவத்தின்ஸ்வரூபம்.) எ-று. தவம், ஆகுபெயர்.

உற்றநோய்நோன்றலுயிர்க்குறுகண்செய்யாமை யற்றேதவத்திற்குரு. எ-இ-க. இதுதுறவறத்தாரை நோக்கிற்று. (௫௫.)

## கிழமைப்படவாழ்.

கிழமைபட-(எல்லாப்பொருள்களாலுந்தமக்கேயுரிமைபடவாழுமன்பிலாரைப் போலாகாமல் அவர்களன்றிநின்னுடம்பாலும்பிறர்க்கே) யுரிமைபட, வாழ்-நீயி

ல்வாழ்க்கையைச்செய், எ-று. கிழமை, உரிமை, அழிவின்றிவாழ்வாய் என்பதுகருத்து.

அன்பிலாரெல்லாந்தமக்குரியரன்புடைய
ரென்புமுரியர்பிறர்க்கு. எ-இ-க. (௩௪.)

## கீழ்மையகற்று.

கீழ்மை-கீழானகுணத்தை, (அக்குணத்தையுடையகீழ்மகனை) அகற்று-நின்றெகெலவாமலே) விலக்கு, எ-று. கீழ்மை, பண்பாகுபெயர்.

நீயுண்பதையுமுடுப்பதையு மவன்காண்பானாயின்மனம்பொறாமல் நின்னிடத்திற்குற்றமில்லாதிருக்கவுங்குற்றம்பிடிக்கவல்லவனாதலானுனக்குத்துன்பம்நேரிடுமென்பதுகருத்து.

உடுப்பதூஉமுண்பதூஉங்காணிற்பிறர்மேல்
வடுக்காணவற்றாகுங்கீழ். எ-இ-க. (௩௫.)

## குணமதுகைவிடேல்.

குணமது-நற்குணத்தை, (நற்குணமுடையோரை) கைவிடேல்-நீகைசோரவிடாதை, எ-று.

விடினுலகமுழுவதும்பகையாற்றீமையினும்பத்துமடங்கு அதிகமானதீமையாமென்பதுகருத்து.

பல்லார்பகைகொளலிற்பத்தடுத்ததீமைத்தே
நல்லார்தொடர்கைவிடல். எ-இ-க.

குணமது-என்பதிலே - து - பகுதிப் பொருள்விகுதி-அகரஞ்சாரியை-குணம்-ஆகுபெயர். (ருசுா.)

கூடிப்பிரியேல்.

கூடி-(ஒருவரிடத்திலேமூர்த்திநற்குணத்தைக்கண்டு) சிநேகித்து,பிரியேல்-(பின்புதுர்க்குணத்தைக்கண்டு)பிரியாதை, எ-று.

இக்கூடுதல்பிரிதலிரண்டுமின் றியெப்போது நன்மைபெறலாமென்பதைநன்றாகஆராய்ந்துசிநேகஞ்செய்யவேண்டுஞ்சிநேகித்துப்பின்பு பிரியலாகாதென்பது கருத்து.

நாடாதுநட்டலிற்கேடில்லைநட்டபின்
வீடில்லைநட்பாள்பவர்க்கு. எ-இ-க.வீடு-பிரிவு.(ருஎ.)

கெடுப்பதொழி.

கெடுப்பது-(மறந்தாயினுமொருவரை) கெடுப்பதை, (கெடுக்கநினைப்பதை)ஒழி-நீயொழித்துவிடு, எ-று.

நினைத்தலுஞ்செய்தலோடொக்குமாதலிற்கெடுப்பதுஎன்றது ஆகுபெயர்.

நினைத்தால் அதற்குமுந்தியே நீகெடும்படியாகத்தருமதேவதைநினைக்குமென்பதுகருத்து.

மறந்தும்பிறன்கேடுசூழற்கசூழி
னறஞ்சூழுஞ்சூழ்ந்தவன்கேடு. எ-இக. (௩அ.)

## கேள்விமுயல்.

கேள்வி-(நீநூலைக்கற்கமுயற்சிசெய்யா விடினுங்கற்றோர் சொல்லும்நூலின்பொருள்களைக்) கேட்பதற்கு, முயல்-முயற்சி செய், எ-று.

பின்புஅக்கேள்வியானது நீசாயும்போது ஊன்றுகோல்போற்சகாயஞ்செய்யுமென்பதுகருத்து.

கற்றிலனாயினுங்கேட்கவஃதொருவற்
கொற்கத்தினூற்றாந்துணை. எ-து-க. ஒல்குதல்-தளர்ச்சி, அது-ஒற்கமெனநின்றது. (௩௩.)

## கைவினைகரவேல்.

கைவினை-(தேகவருத்தத்திற்குஅஞ்சி வேறுமுயற்சிகளைச்செய்து பெருமைபெறலாமென்றெண்ணிக்) கைசெய்யுந் தொழிலாகியஉழவுதொழிலை, கரவேல்- (செய்ய)மறைக்ாதை,(நின்தேகத்தையொளிக்காதை,) எ-று.

அப்படிப்பெருமைபெறலாமென்றெண்ணியமுயற்சிகளைச்செய்து முனைவின் பொருட்டு இத்தொழில்செய்வோர்பின் வந்துநின்றே சிறுமைப்படவேண்டுமாதலால்வருத்தத்திற்கு அஞ்சாமலித்தொழி

லைச்செய்வாயாயின் நீபோயொருவனையி
ரந்து பின் செல்லவேண்டாது நீயேயிரப்
பவர்க்குவேண்டியவற்றைக்கொடுத்து வா
ழ்ந்திருக்கலாமென்பதுகருத்து.

இரவாரிரப்பார்க்கொன் றீவார்கரவாது
கைசெய்தூண்மாலையவர். எ-இ-க.

இக்குறளினுள்-கரவாது-என்னும்வினை யெச்சத்தைப்பரிமேலழகர் கைசெய்து என்பதனோடுகூட்டாமல், ஈவாரென்பதனோடுகூட்டிமுடித்தார். ஒன்றிரவார் ஒன்றிரப்பவர்க்கெல்லாமீவார் - வருத்தத்திற்கஞ்சித்தந்தேகத்தையொளிக்காமற்கையாலுழுதுண்டலையியல்பாகவுடையார், என்பதேசிறந்துகாட்டிற்று. என்னெனின்-கரவாதென்ற ஓர்மொழியேயித்தொழிற்கு உறுதிதோன்றநின்று இரவாமைக்குமீதற்குங்காரணமானமையாலெனக்க. கைவினையுழவுதொழிலென்பதை. கைசெய்தூண்மாலையவர் என்றவிதனுள்ளுங்காண்க. மற்றக்கைத்தொழிலெல்லாமிதன் பிற்படுதலாற்கைவினையென்றது இதற்கேசிறப்பாயிற்று. எல்லாமுயற்சிகளைச்செய்து மித்தொழில்செய்வோரைப்பின்சென்று சிறுமைப்படவேண்டுமென்பதற்கு, உ-ம்.

சுழன்றுமேர்ப்பின்னதுலகமதனா
லுழந்துமுழவேதலை. எனக்காண்க. (௩௰.)

## கொள்ளைவிரும்பேல்.

கொள்ளை-நீசத்துருக்களைச்செயித்துஅவ ரூர்களைக்கைக்கொண்டபோதுஅவ் வூர்களைக்) கொள்ளையிடுதற்கு, விரும்பேல்-ஆசைப்படாதை, எ-று.

ஆசைப்படுவாயாயின் நீகைக்கொண்ட போதேயவ்வூர்கள் நின்னூர்களேயாமாத லாற்குடிகளாற்றாதுன்புற்றழுதகண்ணீ ரோநின்செல்வத்தையும்நின்னையுந்தப்பா தேவிரைந்துகெடுத்தற்குச்சிறந்த கருவி யாமென்பதுகருத்து.

அல்லற்பட்டாற்றா தழுதகண்ணீரன்றே
செல்வத்தைத்தேய்க்கும்படை. எனவிக்கருத்தேபற்றித்திருவள்ளுவனாருங்கூறுவதுகாண்க. இது அரசனை நோக்கிற்று. (௩௧.)

## கோதாட்டொழி.

கோதாட்டு-பிறனையிகழ்ந்துகுற்றமுண்டாகவிளையாடுவதை, ஒழி-நீயெப்போதுமொழித்துவிடு, எ-று. இகழ்ந்துஎன்பது சொல்லெச்சம்.

அதுநீயன்புடையவனாகஇருத்தற்கு இன்பந்தராதென்பதுகருத்து.

நகையுள்ளுமின்னாதிகழ்ச்சிபகையுள்ளும்
பண்புளபாடறிவார்மாட்டு. எ-தி-க.

இக்குறளுக்கு-பகையுள்ளும்பண்புள செயல்களையேயறிந்து செயவல்லாரிடத் துஇகழ்ச்சிவிளையாட்டிடத்துமின்னாது. என வோர்முடிபாக்காது. நகையுள்ளுமிகழ் ச்சியின்னாதாதலாற் பாடறிவார்மாட்டுப்ப கையுளும்பண்புள. எனவிரண்டுமுடிபாக் கிக்கூறினார். பாடு-செயல். (௪௨.)

கேள்வையகற்று.

கேள்வை-பழியை, (சான்றோர் பழிக்க ப்படுங்கருமத்தை) அகற்று-செய்யாமலே விலக்கு, எ-று. கேள்வை-யாகுபெயர்.

வறுமையினாலே, தளர்ந்தழைப்புடைய தாய்பசித்திருப்பக்கண்டுஅதின்பொருட் டாயினுமதைச் செய்யலாகாதென்ப தா ம். இ-று.

ஈன்றாள்பசிகாண்பானாயினுஞ்செய்யற்க
சான்றோர்பழிக்கும்வினை. எ-இ-க-இது அமைச்சனை யுமேனையோரையுநோக்கிற்று. (௪௫.)

சக்கரநெறிநில்.

சக்கரநெறி-அரசன்காவற்சாகாடுகைக் கும்நெறியிலே, (அரசனுலகத்தைக்காக்கு ம்பொருட்டுஅரசநீதியாகியஇரதத்தை ச்

செலுத்தும்நெறியிலே) நில்-விலங்காம
லேநில், எ-று.

அரசநீதிக்குமாறுபடாதுநின்றொழுகு
வன்பதாம், அரசனாக்கினைகடந்தெதிர்த்
தவரைத்துணிப்பானாதலால் உவமையாகு
பெயராய்ஆக்கினையைச்சக்கர மென்றா
ரெனினும்அமையும்.இந்நெறிவிலங்கினால்
அரசன்சீறுமென்பதுகருத்து.

யாண்டுச்சென்றியாண்டுமுளராகார்வெந்துப்பின்
வேந்துசெறப்பட்டவர். எனத்தி-இக்க-க. (சச.)

சான்றோரினத்திரு.

சான்றோர்-பெரியோருடைய, இனத்
து-கூட்டத்திலே, இரு-நீயென்றைக்குஞ்
சேர்ந்திரு, எ-று.

சேர்ந்திருந்தாற்பகைவராலுமிடையூறி
ன்றிவாழலாமென்பதாம். இ-று.

தக்காரினத்தனாய்த்தானொழுகவல்லானைச்
செற்றார்செயக்கிடந்ததில். எ-இ-க. (சரு.)

சித்திரம்பேசேல்.

சித்திரம் (அச்சான்றோர்கூட்டத்திலே
நீயிருக்கும்போது)எழுதியசித்திரத்தைப்
போலவேயடங்கி, பேசேல்-முந்தியொ யா
ன்றையும்பேசாதிரு, எ-று.

அடங்கிஎன்பதுசொல்லெச்சமாய்க்கு

றைந்துநின்றது, இவ்வாறுமுந்திப்பேசா தடங்கியிருத்தல்எல்லாநன்மைகளைப்பார்க்கிலும்நன்மையென்பதாம். இதன்கருத்து. விளங்கிற்று.

நன்றென்றவற்றுள்ளு நன்றேமுதுவருண்
முந்துகிளவாச்செறிவு. எ-இ-க.

சித்திரப்பாவையினத்தகவடங்கினச் சான்றோருழையடங்கியிருத்தற்குப் பி றருங்கூறுதல்காண்க. (உ௯.)

## சீர்மைமறவேல்.

சீர்மை-புகழின்பண்பை, மறவேல்—(பெற) மறந்துவிடாதை, எ-று.

பூதவுடம்புநல்கூர்ந்துகைவிடினும்புகழின்பண்பைப்பெறுவாயாயின்அது உனக்கோருடலாய்நின்றுநின்னையுயிர்ப்பித்தென்றுமுள்ளவனாகவாழச்செய்யுமென்பதுகருத்து. இதனுள் (பெற) என்பது சொல்லெச்சம்.

நத்தம்போற்கேடுமுளதாகுஞ்சாக்காடும்
வித்தகர்க்கல்லாலரிது. எனத்தி-இக்க-க. (௩௰.)

## சுளிக்கச்சொல்லேல்.

சுளிக்க-கேட்போர்வெறுக்கும்படியாக, சொல்லேல். (குன்றக்கூறல்முதலிய

பத்துவகைக்குற்றங்களும்படச்) சொல்லாதே, எ-று.

கேட்டவர் கட்டி வைத்தார்போல மற்றொன்றையுநாடாமலிருக்கவுங்கேளாதவர் கேட்கவிரும்பிவிரைந்தோடிவரவும்-சுருங்கச்சொல்லன்முதலிய பத்துவகை யழகும் படச்சொல்லவேண்டுமென்பது கருத்து.

கேட்டார்ப்பிணிக்குந்தகையவாய்க்கேளாரும்
வேட்பமொழிவதாஞ்சொல். எ-டு-க. இதுதூதுவரைப்போர்க்கும் அமைச்சர்க்கும்பொருந்திற்று, (சஅ.)

## சூதுவிரும்பேல்.

சூது-சூதாடுவதை, விரும்பேல், (வென்றுபொருள்பெறுவதாயிருப்பினும்) விரும்பாதை, எ-று.

வென்று அப்பொருளையனுபவிப்பது தூண்டிலிற் பொதிந்தமாமிசத்தைமீன்விழுங்கியதுபோலத்துன்பமாமென்பதாம். கருத்துவிளங்கிற்று.

வேண்டற்கவென்றிடினுஞ்சூதினைவென்றதூஉந்
தூண்டிற்பொன்மீன்விழுங்கியற்று. எ-டு-க. (சகூ.)

## செய்வினைதிருந்தச்செய்.

செய்வினை-நீசெய்தவினையை, திருந்த-செப்பமாய்நிறைவேற, செய், (தொடர்ந்து)செய், எ-று.

க

றிறைவேறச்செய்யாது-இனியிக்குறையெ
ன்செயுமென்றிகழ்ந்து விட்டிருப்பாயா
யின்அதுபகைக்குறைதீக்குறைபோல வள
ர்ந்துகெடுக்குமென்பதுகருத்தாயிற்று.

வினை பகையென் றிரண்டி னெச்சந் நினையுங்காற்
றீயெச்சம் போலத்தெறும்-எ-இ-க.

பகைக்குறைதீக்குறை வளர்ந்துகெடுத்
தலெவ்வாறெனின், எல்லாப்பகையையும
டக்கிச்சிறிது பகையைவிட்டுவைப்பினும்
எல்லாநெருப்பையும் அவித்துச் சிறிதுவி
ட்டுவைப்பினும்பின்பு அவைவளர்ந்துஉச
ந்துகொண்டுகெடுத்தலென்க. (௫௰.)

## சேர்விடமறிந்துசேர்.

சேர்விடம்-(பின்வருத்தங்கொடாதிரு
க்கத்தக்க) நல்லிடத்தை, அறிந்து-ஆராய்
ந்துணர்ந்து, சேர்-பின்புஅவ்விடத்துச்
சேர், எ-று.

மிகுந்தபலசாலியாயினுமிடமல்லாத
இடத்தைச்சேர்ந்தாற்கெடுவருமென்ப
துகருத்து.

காலாழ்களரினரியடுஉங்கண்ணஞ்சா
வேலாண்முகத்தகளிறு. எ-இ-க.

செல்வழி-சார்வழி-விண்வத்துக்கொட்
கும்-என்றற்போலச்சேர்விடமெனமெ

யீற்றின்முன் வகரந்தோன்றிநின்றது.

(௫௧.)

## சையெனத்திரியேல்.

சையென-(மேன்மக்கள்) சீயென்றரு வருக்கும்படி, திரியேல்-(வீணாகவீதிகளில்) உலாவித்திரியாதை, எ-று.

திரிந்தால்அந்தத்திரிவுஉன்னைநரகத்திற் செலுத்துந்திரியாதுஅடங்கியிருந்தால்அந்தஅடக்கம்உன்னைத்தேவருளொருவனாகச்செலுத்துமென்பதாம்-இதன்கருத்துவிளங்கிற்று.

அடக்கமமரருளுய்க்குமடங்காமை
யாரிருளுய்த்துவிடும். எ-இ-க.

சையென்றது இகழ்ச்சிக்குறிப்பு-அதுசீ யென்பது, இக்காலத்துச்சையெனவுந்திரிந்துவழங்குகின்றது. சையெனவென்றதனால்வீணாகவென்பது மேன்மக்களென்பதுந் திரியேலென்றது இடப்பொருளாதலால், இடமும்வருவித்துரைக்கப்பட்டன.

(௫௨.)

## சொற்சோர்வுபடேல்.

சொல்-(நீபிறரோடுபேசுஞ்)சொற்களில், சோர்வுபடேல்-மறதிபடப்பேசாதை, எ-று.

பிறர்க்குமுனக்கு நன்மைதீமைகள் அத னாலுண்டாம். ஆகலால் அச்சோர்வைப்பா துகாக்கவேண்டுமென்பதாம். இ-று.

ஆக்கமுங் கேடுமதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. எ-இ-க. (௫௩.)

## சோம்பித்திரியேல்.

சோம்பி-(நீ செய்யவேண்டுமுயற்சியை ச்செய்யாது) சோம்பலையுட்கொண்டு, திரி யேல்-திரியாதை, எ-று.

திரிந்தால் நீ கெடுவதுமல்லாமலுனக்கு முன்னே தானேயுன் குடியுங்கெடுமென்ப து கருத்து.

மடியடிக் கொண்டொழுகும் பேதைபிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து. எ-இ-க. (௫௪.)

## தக்கோனெனத்திரி.

தக்கோனென-(நீ சஞ்சரிக்கவேண்டுமி டங்களிலேயெல்லாம்) இவன் நடுவுநிலைமை யுடையவனென்றுபுகழும்படியாக, திரி-நீ சஞ்சரி, எ-று.

தக்கோன்-தகுதியுடையவன்-தகுதி-ந டுவுநிலைமை-அது, பகை, நட்பு, பொதுமுகம், என்னுமூன்றிடத்துநீதிதப்பாமலே நிற்ப து. இந்தவொருதருமமுமேயுளதாயின் அது மிகவுநன்றென்பது கருத்து.

றனதியெனவொன்று நன்றேபகுதியாற்
பாற்பட்டொழுகப்பெறின். எ-இ-ங. (௫௨.)

## தானமதுவிரும்பு.

(இல்விடத்திருந்துவாழவிரும்புவாயாயின்
முன்னே) தரித்திரர்க்குவேண்டியவற்றை
நீகொடுக்கவேண்டுமென்பதைவிரும்பு,
ஈயீந்துவாழ்தலாகிய இல்லறத்துறவாமீ
யாதுவாழ்தலிர்சாதலினிதாதலாலென்று
வாறு. தானங்கொடைப்பொருளாதலாற்
கொள்வோருங்காலமும்பெறப்பட்டன
ஆயினென்பதுங்காரணமுமெஞ்சிநின்ற
இசையெச்சம்வருவித்துரைக்கப்பட்டன.
சாதலினின்னாததில்லையினிதூஉ [இ-அ.
மீதலியையாக்கடை.
என்றதிக்குறளினுள்ளே தானமதுவிரும்பென்பதற்
குதாரணங்காண்க. (௫௩.)

## திருமாலுக்கடிமைசெய்.

திருமாலுக்கு- (உலகமாயையுன்னைவருத்தாதிருக்கவேண்டுவாயாயின்) மாயோனுக்கு, அடிமைசெய்- நீயடிமைத்தொழிலைச்செய், எ-று.

மாயையைக்கடந்துநிற்கஒருவராலுங்
கூடாதாதலாலும், அந்தமாயைதானும்
அவன்சொல்லைக்கடந்துநிற்கமாட்டாது

ஆதலாலும், அவனுக்கடிமைசெய்வாயாயி னதுவருத்தாதென்பதுகருத்து.

இருள்சேரிருவினையுஞ்சேராவிறைவன்
பொருள்சேர்புகழ்புரிந்தார்மாட்டு. எனத்திருவள்ளுவருமப்பொதுவகையாவிக்கருத்தையுமுட்கொண்டு கூறுதல்காண்க.

அப்படியானு லங்கேயவர் மூவர்க்கும் பொதுப்படக்கூறியது கடவுள்வாழ்த்து, இங்கே இவ ரிச்சூத்திரத்துச் சிறப்புவகை யாற்கூறியதாயிற்று, ஆதலாலதற்கதுபொ ருந்தாதெனிற்பொருந்தும், என்னெனி ன் இச்சிறப்பையுமுட்கொண்டேபொது ப்படநிற்றலன்றியிதனை நீக்கிநில்லாமை யாலென்க. (௫எ.)

தீவினையகற்று.

தீவினை-(பிறர்நோகத்தக்க) பாவச்செ யல்களை, அகற்று-நீசெய்யாமலேவிலக்கு, எ-று. விலக்கியிருந்தாலுனக்கொருகேடுமு ண்டாகாதென்பதுகருத்து.

அருங்கேடனென்பதறிகமருங்கோடித்
தீவினைசெய்யானெனின். எ-இ-க. (௫அ.)

துன்பத்திற்கிடங்கொடேல்.

துன்பத்திற்கு-(முயற்சிசெய்யும்போ துவருஞ்சரீரப்பிரயாசையாகிய) துன்பத் திற்கு, இடங்கொடேல்-(இன்பமாக இருத்

தற்கன்றிய துன்பமாகஇருத்தற்கு) நீயி டங்கொடாதை, எ-று. அத்துன்பத்தையே யின்பமாகக்கொண்டு முயல்வாயாயின் அது நின்பகைவருன்னை ந ட்பாக விரும்பத்தக்க மேன்மையைத்தரு மென்பதாம். இ-ரு.

இன்னாமையின்பமெனக்கொளினாகுந்தன்
னொன்னார்விழையுஞ்சிறப்பு. எ-இ-க. (௬௩.)

### தூக்கிவினைசெய்.

தூக்கி-(வினைசெய்யும்போது அதுமு டித்தற்குவேண்டியமுயற்சியையும் அதற் குவரும்விக்கினத்தையும்முடிந் தால் அ டையும்பிரயோசனத்தையும்நன்றாக) ஆ ராய்ந்துபார்த்து, வினைசெய்-(அதிகப்பி ரயோசனத்தைத்தருவதானால்) அந் த் வி னையைச்செய்யத்தொடங்கு. எ-று. கருத் துவிளங்கிற்று.

முடிவுமிடையூறுமுற்றியாங்கெய்தும்
படுபயனும்பார்த்துச்செயல். எ-இ-க. (௬௪.)

### தெய்வமிகழேல்.

தெய்வம் (நீகுடிசெய்தற்கேற்றகரும ங்களையுறுதியாகப்பற்றிச்செய்யாத நி லேவினையுஞ்சிறுமையைக்குறித்து மன நொந்து இது தெய்வஞ்செய்ததென்று)

தெய்வத்தை, இகழேல்-இகழ்ந்துபேசா
தை, எ-று.

அச்சிறுமைநீங்குதற்கேற்ற கருமங்களைவிரைந்துசெய்யக்கடவேனென்றுதொடங்குவாயாயின் உதவிசெய்தற்பொருட்டு அத்தெய்வமுனக்குமுன்னே தானேயிடைக்கட்டிக்கொண்டுவந்துநிற்குமென்பதுகருத்து.

குடிசெய்வலென் னுமொருவற்குத்தெய்வ
மடிதற்றுத்தான் முந்துறும். ஆதலாற்றெய்வமிகழேல் எனச்சென்றொட்டுதல்கண்டு திருவள்ளுவனாருமிவ்வாறுகூறினாரென்க. (௫௧.)

## தேசத்தோடொத்துவாழ்.

தேசத்தோடு-(நீயவவையாள்பவனானாலும்) நின்தேசத்துள்ளவருடைய இல்வாழ்க்கைநடையோடு, ஒத்துவாழ்- நீயுமொத்திருந்தில்வாழ்க்கையைச்செய், எ-று.

நானவரைத்தண்டிப்பவனென்னையாராதண்டிக்கவல்லாரென்று நீநினைத்தபடிநடப்பாயாயிற்பாவமும்பழியுநேரிடுமென்பதுகருத்து. தேசம்ஆகுபெயர்.

எவ்வதுறைவதுலகமுலகத்தோ
டவ்வதுறைவதறிவு. எ-இ க. இதுஅரசனைநோக்கிற்று. (௫௨.)

## தையல்சொற்கேளேல்.

தையல்சொல்-உன்மனையாட்டிசொன்னவார்த்தையை, கேளேல்-கேட்டுநடவாதை, எ-று.

நடந்தால்அறம்பொருள்இன்பங்கண்மூன்றுமிழப்பாயென்பதுகருத்து.

அறவினையுமான்றபொருளும்பிறவினையும்
பெண்ணேவல்செய்வார்கணில். எ-இ க. கேளேல்
என்றது அதன்காரியத்தோன்றுதின்றது. (௬௯.)

## தொன்மைமறவேல்.

தொன்மை-பழமையாகியசிநேகத்தை, மறவேல்-மறந்துகோடங்கொள்ளாதை, எ-று.

மறவேல்என்றதுங்காரியந்தோன்றநின்றது-இதுகாரணந்தோன்றநின்றதெனின், தொன்மைமறவாக்காற்கோடந்தோன்றுது ஆதலால் அன்றென்க. நெடுநாட்பழகியசிநேகிதர்நீவருந்தத்தக்ககுற்றத்தைச்செய்வாராயின் அதுபேதைமையென்றாயினும் நின்மேலுநெடுநாட்பழகியவுரிமையென்றாயினுங்கொள்வதல்லது அன்பின்மையெனக்கொண்டுகோடஞ்செய்யலாகாதென்பதுகருத்து.

பேதைமையொன்றோபெருங்கிழமையென்றுணர்க்
நோதக்கநட்டார்செயின்.

உணராது மறந்துகோடங்கொளேல்
எனச்சென்றூட்டுதல்கண்டு திருவள்ளுவ
நாருமிவ்வாறுகூறினாரென்க. (௬௪.)

தோற்பனதொடங்கேல்.

தோற்பன-(வென்றியுமிலாபமுமெய்தலாமென்றெண்ணி) முதலுமிழந்து தோற்பதற்கேதுவாகியவினைகளை, தொடங்கேல் (வலியிடங்காலமுதலியவைகளைநன்கு ஆராய்ந்துபாராமல்) நீசெய்யத்தொடங்காதே, எ-று.

தொடங்கினால் உள்ளதுமிழந்துகெடுவது நிச்சயமென்பதுகருத்து.

ஆக்கங்கருதிமுதலிழக்குஞ்செய்வினை
யூக்காரறிவுடையார். எ-இ-க. (௬௫.)

நன்மைகடைப்பிடி.

நன்மை-பின்புஇன்பந்தரும்வினையை, கடைப்பிடி-(அப்போதுதுன்பந்தருவதாயிருப்பினும்) செய்யத்துணிவுகொள், எ-று. பின்பு-என்பதும். செய்ய-என்பதுங்குறைந்துநின்றன.

பின்புஇன்பந்தரும்வினையென்றதனால் அப்போதுதுன்பந்தருவதாயினுமென்பது பெற்றாம். கடைப்பிடி என்பதுவினை

முடிக்குந்துணிவு, அதுஇங்கேவினைத்தன்மைப்பட்டுநின்றது - தன்மையாகுபெயர். கருத்துவிளங்கிற்று.

துன்பமுறவரினுஞ்செய்கதுணிவாற்றி
யின்பம்பயக்கும்வினை. எ-ஙு-க. (௬௬.)

நாடொப்பனசெய்.

நாடொப்பன)-நீயாளுந்தேசத்துள்ளவர்குற்றஞ்செய்தாராயின்அதற்குத் தகும்படி)யவரொத்துக்கொள்ளத்தக்கதண்டநீதிகளை, செய்-நீநயந்துசெய், எ-று.

நயந்துசெய்தலாவது-அறநூல்காட்டிச்செய்தல், அவ்வாறன்றிக்கடுஞ்சொற்சொல்லிக்குற்றத்தின்மேற்பட்ட தண்டனைகளைச்செய்வாயாயிற்சத்துருக்களாலேயபசயப்பட்டுக்கெடுவாயென்பதாம். இது அரசனைநோக்கிற்று. இ-று. உ-ம்.

கடுமொழியுங்கையிகந்ததண்டமும்வேந்த
னடுமுரண்டேய்க்குமரம். எ-க.

அடுமுரண். பகைவரைவெல்வதற்கேற்றவலிமையாகிய (இரும்பை,) தேய்க்குமரம்-தேய்ப்பதற்குஅமைந்தஎஃகினாற்செய்யப்பட்டஅரக்கருவிகளாம். (௬௭.)

நிலையிற்பிரியேல்.

நிலையில்-(நிற்கின்றவுயர்ந்த)நிலையிலே

நின்று, பிரியேல் - பிரிந்துதாழ்ந்தநிலையி லேவாராதை, எ-று.

வந்தால், தலையிலேநின்றுநீங்கியமயிரைப்போலேயிழிவுறுவாயென்பதுகருத்து.

தலையினிழிந்தமயிரனையர்மாந்தர்
நிலையினிழிந்தக்கடை. எ-இ-க. (௬௮.)

## நீர்விளையாடேல்.

நீர்-நற்குணமில்லாதநீர்களிலே, விளையாடேல்-நீநீந்திவிளையாடாதை, எ-று.

உள்ளேபகையையவைத்திருந்தவர்முன்னேயிதத்தைக்காட்டல்போல, அப்போதுஇன்பந்தரினும்பின்புதுன்பந்தருமென்பதுகருத்து. துன்பந்தருவதுநோக்கிநற்குணமில்லாதநீரெனக்காண்க. நீர்-சாதியொருமை,

நீபுனனீருமின்றுநவின்றுதமர்நீரு
மின்றுவாமின்றுசெயின்.

எனக்கூறியவிக்குறளினையிச்சூத்திரத்திற்குஇயைய-நீபுனனீர்என்பதைக்குளிர்ந்தநீரெனவும், நீர்-பண்மைகுறித்து நின்றதெனவும், நீரும்-என்கின்றவெண்ணும்மையெச்சவும்மை எனவுங்கொண்டு உவமையைப்பொருளாக்கிப்பொருளையுவமையாக்கியுதாரணங்காண்க. (௬௯.)

## நுண்மைநுகரேல்.

நுண்மை-மாவாகியபண்டத்தை, நுக
ரேல்-விழுங்காதை, எ-று.
வி. அதனையீரங்கொண்டேமெல்லமெல்ல
மென்றுமுழுவதுநுகராமலுடனேவிழுங்
கக்கருதினலது துன்பஞ்செய்யுமென்ப
தாம், அரசனருளைப்பெற்றவன்மேன்மே
லுமவனுக்கிரங்காட்டியே முழுவதுங்கொ
ள்ளாமலுடனே கொள்ளாதசெயல்களைச்
செய்யக்கருதுவானாயிற் றுன்புறுவானெ
ன்னும்பொருள்தோன்றநின்றதனாலிது-
ஒட்டென்னுமலங்காரம், நுண்மை, ஆகு
பெயர். நுகர்தல்-விழுங்குதல். பின்பு, ஈர
ம்-அன்பு. கொள்ளாதசெயல்களைச்செய்
யாமையறிவுடைமை என்பதிதன்கருத்து.
இது, அமைச்சனைநோக்கிற்று. [யார்
கொளப்பட்டேமென்றெண்ணிக்கொள்ளாதசெய்
துளக்கற்றகாட்சியவர். எ-இ-க. (எய.)

## நூல்பலகல்.

நூல்பல-(கற்றுரவையிலேயுஞ்சா
ணசெயவேண்டியொருநூலைக்கற்கப்புகி
ன்அதற்குமுதல்வழிசார்புகளாகிய)பலநூ
ல்களையும், கல்-நீகசடறக்கற்றுக்கொள்,
எ-று. இதன்கருத்துவிளங்கிற்று.

ஆற்றினளவறிந்துகற்கவவையஞ்சா
மாற்றங்கொடுத்தற்பொருட்டு. எ-இ-க. (எக.)

## நெற்பயிர்விளை.

நெற்பயிர்-(நீயொருவனைச்சேவித்துப் பின்செலாதிருக்கவேண்டின்)நெல்லுமுதலியபயிர்கள், விளை-விளைதலைச்செய், எ-று.

தலைமைபற்றிநெற்பயிரென்றதனால், நெல்லுமுதலியபயிர்களென்பதுபெற்றாம், கருத்துவிளங்கிற்று.

உழுதுண்டுவாழ்வாரேவாழ்வார்மற்றெல்லாந்
தொழுதுண்டுபின்செல்பவர். என்னுமிக்குறளின்கருத்திதற்கொத்திருத்தல்காண்க. (எஉ.)

## நேர்படவொழுகு.

நேர்பட-(மேன்மைபெறவேண்டுவாயாயின்) ஒழுக்கங்கோணமல், ஒழுகு-நீநட, எ-று.

ஒழுகுஎன்றதனால்-ஒழுக்கமென்பது பெற்றாம், ஒழுக்கங்கோணுமாறாற் பெரும்பழியெய்துமென்பதுதானேவரப் பெறும். இதன்கருத்தும்விளங்கிற்று.

ஒழுக்கத்தினெய்துவர்மேன்மையிழுக்கத்தி
னெய்துவரெய்தாப்பழி. எ-இ-க. (எங.)

## நைவினைநணுகேல்.

நைவினை-பிறர்கெடத்தக்கதீவினைகளை, நணுகேல்-(நீசெய்யக்) கிட்டாதை, எ-று.

வைநவினையென்றதனாற் றீவினைகளென்பதுபெற்றாம், வைதல்—வருந்துதல், தீவினைசென்றவிடமெல்லாம்பின்சென்றே சுடுமாதலாற்றீயினுமஞ்சவேண்டுமென்பது கருத்து.

தீயவைதீயபயத்தலாற்றீயவை
தீயினுமஞ்சப்படும். எ-இ-க. (எச.)

நொய்யவுரையேல்.

நொய்ய-(பெரும்பயனில்லாத) அற்ப வார்த்தைகளை, உரையேல்-நீசொல்லாதை, எ-று. நொய்-அற்பம், நுண்ணறிவுடையார்க்கு அதுஅழகன்று என்பதுகருத்து.

அரும்பயனாயுமறிவினார்சொல்லார்
பெரும்பயனில்லாதசொல். எ-இ-எ. (எரு.)

நோய்க்கிடங்கொடேல்.

நோய்க்கு-வாதபித்தஐயங்களுக்கு, இடம்-(நித்திரை ஆகாரஞ்செய்தொழில் இவைகுறைதலுமிகுதலுமாகிய) குடியிருப்பிடங்களை, கொடேல்-நீகொடாதை, எ-று. கொடுத்தாலதுபற்றியெல்லாநோய்களுந்துன்பஞ்செய்யுமென்பதுகருத்து.

மிகினுங்குறையினுநோய்செய்யுநூலோர்
வளிமுதலாவெண்ணியமூன்று. எ-இ-க. (எசு.)

பழிப்பனபகரேல்.

பழிப்பன (சான்றோர்) பழிக்கப்படுவ

னவாகியபொய்மூதலியநால்வகையிழி
சொற்களை, பகரேல்-மறந்துஞ்சொல்லா
தை, எ-று.

பகரேல் என்றதனாற்சொற்களென்பது
ம், பழிப்பனவென்றதனால்-மறந்தும்என்
பதும்,பெற்றும். மறந்துபேசினுமொழு
க்கங்கெடுமென்பதுகருத்து.

ஒழுக்கமுடையவர்க்கொல்லாவேதீய
வழுக்கியும்வாயாற்சொலல். எ-இ-க. (எஎ.)

## பாம்பொடுபழகேல்.

பாம்போடு-(ஒருகுடிவினுள்ளே) சர்ப்
பத்தோடு-பழகேல்-பழகிக்குடித்தன்மை
செய்யாதை, எ-று.

பழகேல்என்றதினாற்பழகற்கோரிடமு
ங்குடித்தன்மையென்பதும்பெற்றும்,
மனப்பொருத்தமில்லாதவரோடுகூடிச் சி
நேகஞ்செய்யாதையென்னும்பொருள்
விளங்கநின்றது.இதுஒட்டென்னுமலங்கா
ரம், இவரோடுசிநேகஞ்செய்வது அப்பா
ம்பொடுபழகுதல்போலநிச்சயமாக வே
கேடுதருமென்பதுகருத்து.

உடம்பாடிலாதவர் நட்புக்குடங்கருட்
பாம்போடுடனுறைந்தற்று. எ-இ-க. (எஅ.)

பிழைபடச்சொல்லேல்.

பிழைபட-(கற்றோரவையிலே நீகற்றநூற்பொருள்களைப்பேசும்போது) குற்றம் நேரிட, சொல்லேல்-(நீதடுமாறிப்) பேசாதை, எ-று.

அப்படித்தடுமாறிப்பேசுதலாலே, மோட்சநெறியிலேநின்றவன் தடுமாறிநரகத்திலேவிழுந்தாற்போலப்பெரிதாகிய துன்பமும்இழிவுமுண்டாமென்பதுகருத்து.

ஆற்றினிலைதளர்ந்தற்றேவியல்புல
மேற்றுணர்வார்முன்னரிழுக்கு. எ-இ-க. (எக.)

பீடுபெறநில்.

பீடுபெற-பெருமைபெறும்படியாக, நில்-(அதற்கேதுவாகியநெறியிலேயுன்னைநீதானேபாதுகாத்துக்கொண்டு) நின்றொழுகு. எ-று.

நில்லென்றதனாலதற்கேதுவாகியநெறியென்பதும், பீடுபெற-என்றதினாற்பாதுகாத்துஎன்பதும்பெற்றாம். கற்புடைமகளிர்தம்மைக்கற்பிலே நின்றும்வழுவாமற்காத்தல்போல இந்நெறியிலே நின்றும்வழுவாமலுன்னை நீயேபாதுகாத்தொழுகுவாயாயிற்பெருமைபெறலாமென்பதுகருத்து.

ஒருமைமகளிரேபோலப்பெருமையுந்
தன்னைத்தான்காத்தொழுகி னுண்டு. எ-இ-க. (௮௰.)

புகழ்படவாழ்.

புகழ்பட—(நின்வாழ்நாண்முழுவதும் பிறர்க்குவேண்டியவற்றைக்கொடுப்பதினாலே) புகழ்தோன்றுநிற்கவே, வாழ்— நீயில்லறத்தோடுகூடிவாழ், எ—று.
இதுவேநின்னுயிர்க்குச்சிறந்த ஊதியமென்பதுகருத்து.

ஈதலிசைபடவாழ்தலதுவல்ல
தூதியமில்லையுயிர்க்கு. எ-இ-க. (௮௧.)

பூமிவிரும்பு.

பூமி—நீபயிரிட்டபுலத்தை, விரும்பு—உனக்குள்ளமற்றையவைகளினு மதிகமாகவிரும்பு. எ—று.

விரும்பித்தினந்தோறும்போய்க்கண்பார்த்துச்செய்யவேண்டியவை செய்யாது சோம்புற்று வேறிடத்திருப்பின் மற்றொருத்தியோடுநீகூடியிருக்கக்கண்டநின் மனையாட்டியைப்போலவேசினந்து இன்பந்தாராதென்பதுகருத்து.

செல்லான்கிழவனிருப்பினிலம்புலந்
தில்லாளினூடிவிடும். எ-இ-க. (௮௨.)

பெரியாரைத் துணைக்கொள்.

பெரியாரை—(உனக்குவந்ததுன்பங்களைநீ

க்கிமறுபடியும் அவை-வாராமலேமுந்திக் காக்கத்தக்க) பெருமையுடையோர்களை, துணைக்கொள்——உனக்குநற்றுணையாகப் பேணிக்கொள், எ-று. பெரியாரென்றதனுலவ்வாறுவிரிக்கப்பட்டது-கருத்துவிளங்கிற்று.

உற்றநோய்நீக்கியுறாஅமைமுற்காக்கும்
பெற்றியார்ப்பேணிக்கொளல். எ-இ-க. (அக.)

## பேதைமையகற்று.

பேதைமை- (பிறப்பிற்குக்காரணமாகிய) அஞ்ஞானத்தை, அகற்று-(வீட்டிற்குநிமித்தகாரணமாகியபிரமத்தைத்தியானஞ் செய்வதினுலே) நீபோக்கு, எ-று.

பேதைமையென்றதனுல்-பிறப்பிற்குக் காரணமென்பதும், அகற்று-என்றதினுல் எதுவும்பெற்றும். பிரமத்தைத்தியானஞ் செய்து அஞ்ஞானத்தைப்போக்குவதே மெய்யுணர்வு என்பதுகருத்து.

பிறப்பென்னும்பேதைமைநீங்கச்சிறப்பென்னுஞ்
செம்பொருள்காண்பதறிவு. எ-இ-க. செம்பொருள் பிரமம். (அ...)

## பைதலோடிணங்கேல்.

பைதலோடு-சிறுபிள்ளைத்தன்மையுடையவர்களோடு, இணங்கேல்-நீபழகாதே, எ-று.

வைதல்-ஆகுபெயர், சிறுபிள்ளைத்தன்மை-அறிவின்மை, பழகினால் அத்தன்மையுனக்கும்நேரிடுமென்பதுகருத்து. உ-ம்.

நிலத்தியல்பானீர்திரிந்தற்றாகுமாந்தர்க்
கினத்தியல்பதாகுமறிவு-எனக்காண்க. (அரு.)

பொருடனைப்போற்றிவாழ்.

பொருடனை-திரவியத்தை, போற்றி-(மென்மேலுமுயரும்படி) பாதுகாத்து, வாழ்-நீயில்வாழ்க்கையைச்செய், எ-று.

இப்படிச்செய்துவாழ்வாயாயின்மற்றத் தருமமுமின்பமுமுனக்கெளிதாமென்பதுகருத்து. உ-ம்.

ஒண்பொருள்காழ்ப்பவியற்றியார்க்கெண்பொரு
ளேனையிரண்டுமொருங்கு. எனக்காண்க. (அசு.)

போற்றடிப்பரியேல்.

போற்றடி- (கல்வியறிவொழுக்கங்களிலேநின்றுன்னைவழுவாமற்) பாதுகாத்தற்பொருட்டு ஆசிரியன் தண்டித்ததற்கு, பரியேல்-நீவருத்தப்பட்டுவிலகாதே, எ-று. இதுமாணாக்கனைநோக்கிற்று.

பரியேலென்றது, அதன்காரியந்தோன்றநின்றது, போற்றடிக்கு, என்னுங்குவ்வுருபுதொக்குநின்றது. போற்றுதற்கேதுவாகியவடி. போற்றடியென்பது, ஓம்படைக்கிளவியென்றதுபோலும். என்னெனின்,

சான்றோரொழுக்கந்தவறினோரைப்பார்த்துச்சொல்லும்,வேம்புங்கடுவும்போல்வனவெஞ்சொற்றாங்குதலின்றி வழிநனிபயக்குமோம்படைக்கிளவி. யதுபோலவே, ஆசிரியன்மாணாக்கன் கல்வியறிவொழுக்கத்திற்றவறியவழிக்கொடுக்கும்,வடுவுஞ்சூடும்போல்வன கசையடிதாங்குதலின்றிவழிநனிபயக்கும்போற்றடி, என்க.

இப்போற்றடிக்குவருந்திநீவிலகினாற் பின்பு அக்கல்வியறிவொழுக்கங்களிலேபலர்கூடிநின்றுன்னைப்பாதுகாப்பினும் புரைபட்டே முறிந்துபோவாயென்பதாகருத்து. உ-ம்.

ஆற்றின்வருந்தாவருத்தம்பலர்நின்று
போற்றினும்பொத்துப்படும்.

என்கின்றவிக்குறள் இளமையிலேதானேயதற்குரியநெறியிலேநின்றுவருத் தப்படாதமுயற்சியானது பின்புபலர் நின்றுபுரைபடாமற்பாதுகாப்பினும்புரைபடுமெனஇவ்விடத்திற்கும்பொருந்துதல்காண்க. (அஎ.)

மனந்தடுமாறேல்.

மனம்- நீமுயற்சிசெய்தலினூன்றிநின்ற)மனத்தோடேகூட, தடுமாறேல்-(விதி

வயத்தினாலே துன்பங்கள் வந்து கொண்டேயிருந்தாலும்) நீயுந்தடுமாறிமுயல்வதைவிடாதை, எ-று.

மனந்தடுமாறலென்னுஞ்சினைவினையைமுதன்மேலேற்றி,மனந்தடுமாறலென்றதனை-மனத்தோடேகூடநீயுந்தடுமாறாதையெனப்பொருளுரைக்கப்பட்டது. தடுமாறேல் என்றதுகாரியந்தோன்றநின்றது.மனமென்னுமிடத்து, முயர்சிசெய்தலினான்றிநின்றமனமென்றது,குறிப்பெச்சம், தடுமாறுதற்கேதுவேண்டுமாதலால்வருவிக்கப்பட்டது,தடுமாறிவிடாதுஉறுதியாக நின்றுமுயல்வாயாயினத்துன்பங்களேதுன்புற்றுவிலகுமென்பதுகருத்து.

உ-ம்.

அடுக்கிவரினுமழிவிலானுற்ற
விடுக்கணிடுக்கட்படும். எ-க. (அஅ.)

மாற்றானுக்கிடங்கொடேல்

மாற்றானுக்கு-சத்துருவுக்கு,இடங்கொடேல்-(மெலியனென்றிகழ்ந்து)சிறந்த நிலனிடத்தைக் கைக்கொளக் கொடாதை, எ-று.

இடமென்றவிடத்துச்,சிறந்தநிலனிடமென்பதுகுறிப்பு-கொடுத்தற்கேது வரு

விக்கப்பட்டது, மெலியனாயினும் அவ்விட
த்தின் வலிமையாற்பின்புநின்னையெளிதின்
வெல்வானென்பதுகருத்து. உ-ம்.

ஆற்றாருமாற்றியடுபவிடனறிந்து
போற்றார்கட்போற்றிச்செயின். எ-இ-க, (அசு.)

மிகைபடச்சொல்லேல்.

மிகைபட-சொற்சுருங்காதுவிரியும்படி,
சொல்லேல்-(அதுசொல்வன்மையென்று
கற்றுவல்லார்முன்பு)நீசொல்லாதை,எ-று.
சொல்லுதற்கு இடம்வருவிக்கப்பட்ட
து-அவ்வாறுசொல்லுதல்அறிவிலாதவர்
செய்கையாதலினதுகுற்றமென்பது கரு
த்து, உ-ம்.

பலசொல்லக்காமுறுவர்மன்றமாசற்ற
சிலசொல்லற்றேற்றாதவர். எ-க.

குன்றக்கூறன்மிகைபடக்கூறலெனப்பிற
ருங்குற்றமெனக்கூறுதல்காண்க. (கூய.)

மீதூண்விரும்பேல்.

மீதூண்-(முன்னுண்டதுசீரணமாகாதி
ருக்க)அதன்மேலுமுண்பதை, விரும்பே
ல்-நீஒருபோதும்விரும்பாதை,எ-று.அது
நோய்செய்யுமென்பதுகருத்து.

அற்றதறிந்துகடைப்பிடித்துமாறல்ல
துய்க்கதுவரப்பசித்து. எ-இ-க. துவர—என்பது
அகரவீற்றுரிச்சொல்-முழுமையும்,என்பதுபொருள்
(கூக.)

## முனைமுகத்துநில்லேல்.

முனைமுகத்து-யுத்தஞ்செய்யுமிடத்து, நில்லேல்-கைசோர்ந்துநில்லாதை, எ-று. நில்லேலென்றஇடத்து,கைசோர்ந்துஎன்பது,குறிப்பு,கைசோர்ந்துசற்றுநின்றாலு மறுவீரத்தன்மைக்குப் புறங்கொடுத்தாற் போலாமென்பதுகருத்து. உ-ம்.

விழித்தகண்வேல்கொண்டெறியவழித்திமைப்பி
னோட்டன்றோவன்கணவர்க்கு.

எனவருமிக்குறளின்பதப்பொருளொழியக்கருத்துவகையாலிச்சூத்திரக்கருத்துக்கொத்திருத்தல்காண்க. (௫௨.)

## மூர்க்கரோடிணங்கேல்.

மூர்க்கரோடு-சலஞ்சாதிப்பவரோடு, இணங்கேல்(யாதொருகருமத்தையுஞ்செய்ய)உடன்படாதை,எ-று.

அவர் ஆகிறகருமத்தை யாகவொட்டாமலேகெடுப்பரென்பதுகருத்து. இணங்கேலென்றதனாற்செய்யவென்பது பெற்றாம். இணங்குதல்,உடன்படுதல். உ-ம்.

ஒல்லுங்கருமமுடற்றுபவர்கேண்மை
சொல்லாடார்சோரவிடல். எ-ம். ஒல்லுங்கருமமுடற்றுபவர்மூர்க்கரெனக்கொண்டு இச்சூத்திரக்கருத்திற்குதாரணங்காண்க. (௫௩.)

மெல்லினல்லாடோள்சேர்.

மெல்-மெல்லிய,இல்-மனையாட்டியாகி ய,நல்லாள்-மடந்தையினுடைய, (பெண் ணினுடைய )தோள்சேர்-தோள்களையாலி ங்கனஞ்செய், எ-று.

இன்பமென்பதுவேயன்றிப்பிறன்ம னைபரத்தையர்தோள்களைச்சேர்வதுதுன் பமாதலுமன்றிப் பழியுநேரிடுமென்பது கருத்து.

அறந்தான் வருவதேயின்பமற்றெல்லாம்
புறத்தபுகழுமில. எ-இ-க. (கூச.)

மேன்மக்கள்சொற்கேள்.

மேன்மக்கள்- (உனக்கொருதளர்வுவந் தபோது)ஒழுக்கமுடையவரது,சொற்கே ள்-வார்த்தையைக்கேள், எ-று.

கேட்டாலதுசாயுமிடத்து ஊன்றுகோ ல்போலுதவிசெய்யுமென்பதுகருத்து.

இழுக்க லுடையுழியூற்றுக்கோலற்றே
யொழுக்கமுடையார்வாய்ச்சொல். எ-இ-க.

மேன்மையொழுக்கத்தி னெய்துத லால் மேன்மக்களென்றது ஒழுக்கமுடை யவரெனக்காண்க. (கூரு.)

மைவிழியார்மனையகல்.

மைவிழியார்மனை-அஞ்சனந்தீட்டியக ண்களையுடையவர்மனையை, (விலைமாதர்வீ

ட்டை) அகல்- (நீகிட்டாமலே) அகன்று போ, எ-று.

சிட்டிகுலவர்மைவிழியுமின் சொல்லும் நின்னைவிநீதுபற்றித் துயர்செய்யுமென் பதுகருத்து. உ-ம்.

அன்பின்விழையார்பொருள்விழையுமாய்தொடியா ரின்சொலிழுக்குத்தரும்.

ஆதலால்-மைவிழியார்மனையகலெனச் சென்றொட்டுதல்காண்க. குலமகளிர்க்குத் தலைமையுமுடைமையுந்தலைவர்மாட்டன்றித் தம்மாட்டின்மையின், மைவிழியார் மனையென, மனையென்னுமுடைமைப் பொருட்குமைவிழியாரையுடையராக்கிக் கூறினமையால்அம்மைவிழியார்விலைமகளிரொன்பதுபெற்றாம். இன்னும், வழக்கிடத்தும் அந்தணன்மனைஅரசன்மனையெனவழங்குவதன்றிப்பெண்பால்மேல் வைத்துவழங்கும்வழக்கின்மைகாண்க.(கூரு.)

மொழிவதறமொழி.

மொழிவது- நீசொல்லப்படும் நூலின் பொருளை, அற-சந்தேகமறும்படியாக, மொழி—(மாணாக்கர்க்கு) விரும்பிச்சொல்லு, எ-று.

இப்படிச்சொல்லாயாயிற் பலநூல்களை யோதியுணர்ந்திருந்தும் வாசனையில்லாத மலரைப்போலவேயாவருமேற்கொள்ளப் படாதிழிவுறுவாரென்பதுகருத்து. இது ஆசிரியனைநோக்கிற்று.

இணரூழ்த்து நாறாமலரனையர்கற்ற துணரவிரித்துரையாதார். எ-இ-க. (கஎ.)

## மோகத்தைமுனி.

மோகத்தை-ஆசையை, முனி-நீ சினந்து செய்துவிலக்கு. எ-று,

முனியென்றதுகாரியநதோன்றநின்றது. விலக்காயாயின அதனாலேமேன்மேலுந் துன்பங்களேவந்துன்னை நலியுமென்பது கருத்து.

அவாவிலார்க்கில்லாகுந் துன்பமஃதுண்டேற் றவாஅதுமேன்மேல்வரும். எ-இ-க. (கஅ.)

## வன்சொல்வழங்கேல்.

வன்சொல்-கடுஞ்சொல்லை, வழங்கேல்-நீசொல்லாதை. எ-று.

இன்சொல்லையேசொல்லுக வென்பது இதன்குறிப்பு, இன்சொல்லைநீக்கிவன்சொற்சொல்வது அமிர்தத்தை நீக்கி விடத்தையுண்பதுபோலத்துயர்செய்யுமென்பது கருத்து. உ-ம.

இனியவுளவாகவின்னாதகூறல்
கனியிருப்பக்காய்கவர்ந்தற்று. எனக்காண்க. (௱௰.)

## வாதுமுற்கூறேல்.

வாது-(நீயெல்லாநூல்களையுங்கற்றுணர்ந்துபிறருக்குஉரைசெயவல்லவனாயினும் ஒருவனைப்பரிக்ஷிப்பதற்காகத்) தர்க்கவார்த்தைகளை, முற்கூறேல்—முந்திப்பேசாதை, எ-று.

பேசுவாயாயின்அதுஅடங்காமையாதலால்அப்பேதைமையின்மேற்பட்ட பேதைமையில்லையென்பதாம்.

வேண்டிநிற்றலின், இசையெச்சமுன் வருவிக்கப்பட்டது. வாதுமுற்கூறேலெனவே அவ்வாறுகூறியவர்க்குச்சமாதானம்நீபிற்கூறுக, என்பதுகுறிப்பெச்சம். இதன்கருத்துவிளங்கிற்று,உ-ம்.

ஓதியுணர்ந்தும்பிறர்க்குரைத்துந்தானடங்காப்
பேதையிற்பேதையாரில். எ. க. (௩.)

## வித்தைவிரும்பு.

வித்தை-(நீயின்புறுதற்கேதுவாகிய)கல்வியை,விரும்பு-(உலகமின்புறுதற்குமேதுவாவதுகண்டுமேலும்)விரும்பிக்கல்,

எ-று.

வித்தையென்றதனால் நீயின்புறுதற்கு
முலகமின்புறுதற்குமேதுவென்பதும்.
விருப்பென்றதனால். கண்டு என்பதும்
மேலுமென்பதும், பெற்றும். படு-என்ப
து படுத்துநித்திரைசெய்யெனப் பொரு
ள்படுதல்போல.விரும்புஎன்றது, விரும்பி
க்கல் என்னும்பொருள்படநின்றது. இப்
படிச்சொல்வது ஆகுபெயரிலக்கணமெ
னக்காண்க.

நீயெனமுன்னின்றவன்இன்புறுதலாவ
து,இம்மையிலேசொற்பொருளின் சுவை
யனுபவித்தல் புகழும்பொருளும் பூசை
யும்பெறுதல்,மறுமையிலேதருமமோட்
சந்தருதலிவற்றாலிடையறுதலின்பமே
பொருந்துதலாம்.உலகின்புறுதலாவது,இ
க்கற்றுணர்ந்தோரைக்கூடியறியாதனவே
ல்லாமறியப்பெற்றேம்பேதைமையினீங்
கினேமென்றுமகிழ்தலாம். இதன்கருத்து
விளங்கிற்று, உ-ம்.

தாயின்புறுவதுல்கின்புறக்கண்டு
காமுறுவர்கற்றுணர்ந்தார். எனக்காண்க • (௩௧.)

வீடுபெறநில்

வீடுபெற- (எவ்வெப்பொருளோடு நீகூ
டிநின்றாயோ அவ்வப்பொருளிலேநின்று)

நீக்கம்பெறும்படி, நில்-(துறவறத்திலே வேறொன்றி)நில், எ-று.

வீடு.நீக்கம்.படுதல்,பாடு. என்றாற்போல,விடுதல்-வீடென நின்றது. நட்டபின்வீடில்லையென்றறிஞருங்காண்க. வீடென்றதனால், கூட்டமுங்கூடுதற்குரிய பொருளும், நில்,என்றதனால்நிற்றற்கு இடமும்வேறொன்றலும்பெற்றாம்.இவ்வாறுநின்றால் இம்மையிலே அவ்வப்பொருள்களைத்தேடுதலாலுங்காத்தலாலும் இழத்தலாலும்வருந்துன்பங்களும்மறுமையிலே பாவத்தால்வருந்துன்பங்களுமுனக்கில்லையென்பது கருத்து. உ-ம்.

யாதினின் யாதினினீங்கியானோத
லதனி னதனி னிலன். எனக்காண்க.

இனிமுத்திபெறும்படி துறவறத்திலே நில்லெனினும்அமையும். இது துறவுநோக்கிற்று. (௫௨.)

அம்ம,வுத்தமனாயிரு.

(உனக்குச்சொல்லிய எல்லாத்தருமங்களிலுமொருகுற்றமுமில்லாமலேயவற்றுளெல்லாம்) நீ நல்லவனாகியேயிரு, எ-று. உத்தமனாகியென்றதனால்,எல்லாத்தருமங்களிலுங்குற்றமில்லாமல்என்பதுபெற்றாம், என்னெனின்-குற்றங்களின்இன்மை

யேகுணங்களின்உண்மையாதலாலென்க.
உனக்குக்கேடுதருவதுகுற்றமேயாதலால்
அதனையணுகாமற்காக்கவென்பதாக ருத்
து, உ-ம்.

குற்றமேகாக்கபொருளாகக்குற்றமே
யற்றந்தரூஉம்பகை. எனக்காண்க.

இச்சூத்திரத்தில்வகரவுடன்படுமெய்வ
ருதற்கேற்ற அகரஈற்றுஅம்மவென்னும்
உரையசைச்சொல்,இப்போதுகூட்டியு
ரைக்கப்பட்டதன்று, டம்படவென்றதில்
இடம்படவெனக்கூட்டிச்சொல்லியது
போலமுன்னமேகூட்டிச்சொல்லப்பட்
டதேயாம்,அகரவுகரஊகாரவொகரவோகா
ரங்கள்மொழிக்குமுதலாகாவென்பதை
நினையாதுவிலக்கிவழங்கினர்போலும்.

அம்மகேட்பித்தலுமசைநிலையுமாகு
மென்றதனால்அம்மவென்பதற்குக்கேள்
என்பதுபொருள்-அம்மஎன்றது-இச்சூத்
திரத்திற்குக்கூறாகநின்றது, அவ்விடத்து
நீயென்பது சொல்லெச்சமாய்க்குறைந்
துநின்றது. இவ்வுரைமேல்வருமூன்றுசூத்
திரங்கட்குங்கொள்க. (௱௩.)

அம்ம, ஊருடன்கூடிவாழ்.

ஊருடன்கூடி-ஒரூரைச்சேர்ந்துஅவ்

வூரினுள்ளவரோடுநீயுமொருவனாகக் கூடி, வாழ்-(இல்வாழ்க்கைநிலையிலே) வாழவேண்டும்படிவாழ்ந்திரு, எ-று.

வாழ்என்றவிடத்து-வாழவேண்டும்படியென்பதுதானேவந்து இயைதல்காண்க. இவ்வாறுவாழ்வாயாயின் உன்னைத்தேவருளொருவனாகவைத்தெண்ணப்படுவாயென்பதுகருத்து, உ-ம்,

வையத்துள்வாழ்வாங்குவாழ்பவன்வானுறையுந்
தெய்வத்துள்வைக்கப்படும். எ-க.

இனியூருடன்கூடாதுதனித்திருந்துவாழ்தலும், இல்வாழ்க்கைநிலைக்குஏலாதுவாழ்தலும்,நரகருளொருவனாகவைத் துப்பழிக்கப்படுதற்கேதுவென்பதுமிதனுளடங்கிநிற்றல்காண்க. (௱௪.)

வெட்டெனன்மற.

வெட்டெனல்-(அப்போதேதலையை வாங்கிப்போடென்று சொல்லும்படியானகுற்றத்தையொருவன்செய்தானாயினும்)உடனேவெட்டென்று உத்தரவுகொடுப்பதை, மற-நீமறந்துவிடு, எ-று.

அப்படிப்பட்டவரிடத்துந்தாக்ஷிணியம் வைத்துப்பொறுத்திருந்துநன்றாகவிசாரணைபண்ணிப்பின்பும்அப்படிப்பட்டவ

னாகவேயிருந்தால்அப்படிச்செய்வதுவே தலைமையானநீதியென்பதுகருத்து. உ-ம்.

ஒறுத்தாற்றும்பண்பினார்கண்ணுங்கண்ணோடிப்
பொறுத்தாற்றும்பண்பேதலை. எ-க.

இக்குறளுக்குப்பரிமேலழகர்-தம்மை யொறுப்பவரிடத்துமரசர்பொறுப்பதுவேதலையாயவியல்பென்றுரைகூறினார்.

ஒறுத்தல், தண்டநீதி. அதுஅரசர்க்கே யுரித்துஅரசனையொறுப்பவரில்லை யாதலாலதுசிறந்துகாட்டிற்றிலை. இனி-ஒறுத்து-தண்டித்தே, ஆற்றும்பண்பினார்கண்ணும்-தன்சீற்றத்தையாற்றிக்கொளற்கேதுவாகியகொலைத்தொழிலுடையார்மாட்டும், கண்ணோடி-கண்ணோட்டம்வைத்து, பொறுத்து. நாட்படப்பொறுத்திருந்து (நன்றாகவிசாரித்து) ஆற்றும்பண்பே-பின்புஅவ்வாறுசெய்யுந்தன்மையே, தலை-அரசர்க்குத்தலைமையானநீதியாம், எ-று. எனின்இக்குறளுக்குளதாந்தன்மையுணர்க. இது அரசனைநோக்கிற்று. (௬௫.)

வேண்டிவினைசெயேல்.

வேண்டி-பிறர்பொருளைக்கைக்கொள்ளவிரும்பி, வினைசெயேல்-அதற்கேதுவாகியதீவினைகளைச்செய்யாதை, எ-று.

வேண்டியென்றதனாற்பிறர்பொருளை
க்கைக்கொள்ளவென்பதுபெற்றும். அப்
படிச்செய்யாதிருத்தலேநடுவுநிலைமை
யென்பதுகருத்து உ-ம்.

படுபயன்வெஃகிப்பழிப்படுவசெய்யார்
நடுவன்மைநாணுபவர். எ-க. (௱௬.)

வைகறைத்தொழுதெழு.

வைகறை. விடியற்காலத்திலே, தொழுதெ
ழு-(பிறதெய்வங்களைத்தொழாமல் ஆதிப
கவனைத்)தொழுதுகொண்டேதுயிலெழு,
எ-து.

தொழுதென்றதனால் ஆதிபகவனையெ
ன்பதும்பிறதெய்வங்களைத்தொழாமலெ
ன்பதும்பெற்றும். வைகறையென்ற இட
த்திலேதொக்குநின்றஇல்லுருபு, எழு என்
னுமேவல்வினைகொண்டது. விடியற்கால
த்திலெழு-எனவேதுயிலென்பதுதானே
வந்தியைதல்காண்க. ஆதிபகவனைத்தொ
ழுதுகொண்டேநித்திரை நீங்கவேண்டுமெ
ன்பதாயிற்று. ஆகவேநனவெல்லாந்தொ
ழுதலாயிற்கனவெல்லாந்தொழுதலாகவே
முடியும்முடியவேஅந்தஅவஸ்தைநீங்குங்
காலுந்தொழுதுகொண்டேநித்திரை நீங்
கலாமெனக்காண்க. ஆதிபகவனைத்தொழு

தெழு என்பதற்கு உதாரணம். திருவாய்மொழி.

உயர்வறவுயர்நல முடையவனெவனவன்
மயர்வறமதிநல மருளினனெவனவ
னயர்வறு மமரர்க ளதிபதியெவனவன்
றுயரறுசுடரடிதொழுதெழென் மனனே. எனக்காண்க

இவ்வாறுதொழுதெழுவார்வீட்டுலகின்கண் அழிவின்றிவாழ்வாரென்பதுகருத்து.

மலர்மிசையேகினான்மாணடிசேர்ந்தார்
நிலமிசைநீடுவாழ்வார். எனத்-க.

இக்குறளிற்சேர்தலென்றதுமனத்தாலும் வாக்கினாலுங்காயத்தினாலுமாதலால், துதித்தல், பாவித்தல், தொழுதல், முதலிய வுமடங்கநின்றது.

இனியிச்சூத்திரத்தைக்கற்புடையாட்டிமேலேற்றி, பிறதெய்வந்தொழாளாகி நின்றெய்வமாகியகணவனைத்தொழுதுகொண்டேநித்திரைதெளி, யெனப்பதப்பொருள்கூறி, இவ்வாறுதொழுதெழுவாயாயின் நீபெய்யெனின்மழைபெய்யுமென்பதுகருத்தாக்கி,

தெய்வந்தொழாஅள்கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப்பெய்யுமழை. எனஇவ்வாறுதிருவள்ளுவருங்கூறியொளினும் அமையும்.

இதற்குத்தன்றெய்வமாகியகணவனை யெனவருவித்துக்காண்க. இனியிச்சூத்திரத்தை-வைகறைத்துயிலெழு,என பாடமாக்குவாருமுளர்,அதனாற்பயனின்மையுணர்க. (௩௭.)

அஃம,வொன்னாரைத்தேறேல்.

ஒன்னாரை-(உள்ளேபகையைவைத்து வெளியிலேசிநேகப்பண்புகாட்டும்) பகைவரை, தேறேல்-நீநட்பென்று தெளிவு கொள்ளாதே, எ-று.

தேறேலென்றதனால்ஒன்னாரையென்றது,உட்பகையையென்பதும்பெற்றாம். தெளிந்துசிநேகித்தாலுனக்கொருதளர்வுவந்தபோதுசகாயஞ்செய்யாமலேகெடுப்பதென்பதுகருத்து. உ-ம்.

உட்பகையஞ்சித்தற்காக்கவுலைவிடத்து
மட்பகையின் மாணத்தெறும். எ-க. (௩௮.)

அம்ம-வோரஞ்சொல்லேல்.

ஓரம்-(நடுவுநிலைமைநீங்கிச்)சாய்வாக, சொல்லேல்-நீ நியாயத்தீர்ப்புச்சொல்லாதே, எ-று.

ஓரம், சாய்வு. ஆக,என்பதுகுறைந்துநின்றது. ஓரமென்றதனால்-நடுவுநிலைமை நீ

ங்கியென்பதும். சொல்லேலென்றதனால்,
நியாயத்தீர்ப்புஎன்பதும்பெற்றாம். சம
முகநின்றுபாரந்தூக்குந்துலாக்கோல்
போலநின்றுஇருவர்வழக்கையுங்கேட்டு ஒ
ருபக்கஞ்சாயாமலுள்ளபடியேசொல் வ
துநடுவுநிலைமையுடையார்க்கழகென்பது
கருத்து. [பாற்
சமன்செய்து சீர்தூக்குங்கோல்போலமைந்தொரு
கோடாமைசான்றோர்க்கணி. எனவிவ்வாறுதிருவள்
ளுவனாருங்கூறுவதுகாண்க,

---

ஔவையாரருளிச்செய்த

ஆத்திசூடிக்கு

இயற்றமிழாசிரியர் இராமாநுசகவிராயர்

செய்தகாண்டிகையுரை

முற்றிற்றுமுற்றும்.

---

## இதற்குறுதாரணமுதனினைப்புணர்த்
## தியது.

செயலுஞ், சிறமு-மிரக்கவுங்-கொடுப்பதும்
பெருமையும்-ஆக்கமும்-எண்ணும் நல்லாறும்
இரத்தலுமுலகமும் மறப்பினும்-அறனுஞ்
சுற்றமும்-அறனழியுந்-நிலைமக்களும்
மனத்ததும்-அல்லவை-யாடற்காவும்
ஆய்ந்-தெழுபிறப்புடன்-நன்றியுட்-பருவமும்
வேல்-வெருவந்தவும்-ஒருமையும்-யாவுஞ்

செவியும்-வஞ்சரமும்-இடுக்கணும்-யாணும்
அறத்தினும்-பொருளல்லவும்-துறந்தார்க்கும்
உறவும்-அன்-புடைப்பதும்-பல்லாரும்
நாடாதும்-மறந்துங்-கற்றும்-இரவாருஞ்
சூழ்வினும்-அல்லலும்-நகையும்-ஈன்றாளும்
யாண்டுத்-தன்காரும்-நன்றும்-நத்தமும்
கேட்டாரும்-வேண்டலும்-வினையுங்-காலாழும்
அடக்கமும்-ஆக்கமும்-மடியுந்-தகுதியும்
சாதலும்-இருளும்-அருங்கேடனென்பதும்
இன்றையோடு-முடிவுங்-குடியும்
எவ்வதும்-அறவினையும்-பேதைமையும்
ஆக்கமுந்-அன்பருங்-கடுமொழியும்
தலையுந்-நிழலுங்கொளவும்-ஆற்றினும்
உழுதும்-ஒழுக்கத்துந் தீயவையும்
அரும்பயனொடு-மீனும்-ஒழுக்கமும்
உடம்பாடும்-ஆற்றினும்-ஒருமையும்-ஈதலுஞ்
செல்லானும்-உற்றநோயொடு-பிறப்பும்
நிலத்தும்-ஒண்பொருளும்-ஆற்றின்வருந்தாவும்
அடுக்கியும்-ஆற்றரும-பலசொல்லவும்
அற்றதும்-விழித்தவும்-ஒல்லுங்கருமமும்
அறந்தானும்-இழுக்கலும்-அன்பின்விழையாரும்
இணருட்-அவாவும்-இனியவும்-ஐந்தும்
தாமும்-யாதினுங்-குற்றமும்-வையத்தும்
ஒறுத்தும்-படுபயனும்-உயர்வறவோடு
மலர்மிசைதானுந்-தெய்வந்தொழாஅளும்
உட்பகையுஞ்-சமன்செய்தும்-உதாரணம்
ஆத்திகுடிக்குநூற்றென்பதுமன்றிநான்
கேத்திரங்குரவனை யெடுத்தியம்பினமே.

எழுத்தறிவித்தவனிறைவனென்றெ
ண்ணலால், வழங்கக்குறைபடாவான்கவிச்
செல்வ—ரறத்துறைவழாராதலாலே, யவ

ொழிந்தவேனைச்சோரகவிகளை வாழ்த்தி
யானிரக்கப்புக்கவிரப்புரையாதெனின் நீங்
கள்குருபத்தியுஞ்செய் நன்றியுந்தருபமு
ஞ்சத்தியமுந்தப்பித்தரித்திரகவிகளாய்வி
ட்டதினாலே,முன்னோர்கள்கீர்த்திப்புண்
ணியபுருடார்த்தங்களும்வேண்டுமென்
றெண்ணியநேககாலங்கஷ்டப்பட்டுஒவ்
வொருநூல்களையுண்டுபண்ணிநூற்காரரொ
ன்றும்அவ்வாறேகஷ்டப்பட்டுஒவ்வொரு
ரைகளைச்செய்து உரைகாரரொன்றும்பேர்
பெற்றார்கள், அதையுணராமலே, விசித்தி
ரசக்திகளையுடைய பிரமசிருட்டிகளைச்சில
விகாரமாக்கி யறிவிலாதாரிதுநாஞ்செய்த
தென்றார்போலவும், குடியில்லாதவீடுக
ளிலே குரங்குகள்பிரவேசித்து அவற்றை
யெல்லாம் விகாரப்படுத்தித் தம்மதென்
றார்போலவும், சிதல்களானவைமிகவும்வ
ருத்தப்பட்டுத்தமதுநீர்வாய்ச்சிறுதுக
ளாலியற்றியபுற்றுக்களில் அவற்றிற்குப்பி
ற்காலம்விஷசெந்துக்கள்பிரவேசித்தவற்
றையெல்லாம்விகாரமாக்கித்தம்மதென்
றார்போலவும் அந்தநூல்களையுமுரைகளை
யுங்கற்றொருவருக்குப்படி சிலவிகாரப்ப

டுத்திவெளிதாகவேயாங்கள்செய்தநூலெ
ன்றுமுறையென்றுஞ்சொல்லிவயிறுவள
ர்த்தலேவானெய்துநெறியென்று துணிந்
தனிர், ஆயினுமித்துணிவுமறுமையின்பத்
தையுங்கெடுத்து நரகத் துன்பத்தையே
செவிலித்தாய்போல வளர்க்குமாதலாலத்
துணிவுகொண்டபடிச்செய்யாமலேயிரா
ந்தெனினும்வயிறுவளர்த்து அறத்தொடுநி
ற்பீராகிற்காசியிலேயநேகராகியசற்பிராம
ணர்களையுங்கற்புடைமகளிர்களையுஞ்சிசுக்
களையுமிரட்சித்தபலனைக்கைக்கொள்வது,
சத்தியஞ்சத்தியஞ் சத்தியஞ் சத்தியங், க
டைப்பிடித்தாங்குவான்கதியதுஞ்சத்திய
ம். என்பதுதான், ஆயினுமிது நீர்சொல்ல
வேண்டிய தென்னெனின் நானிந்தஆத்தி
சூடி, கொன்றைவேய்ந்தன், வெற்றிவேற்
கை, மூன்றுக்குமொருவருடக்காலங் கஷ்ட
ப்பட்டுத்தனித்தனிகுறளுதாரணங்காட்டி
க்காண்டிகையுரையும் பதவுரையுஞ்செய்
தேனாதலாலவற்றையுமிவ்வாறுசெய்யப்பு
குவீர்களென் றெண்ணிச் சொல்லவேண்டி
ற்றென்க.